பக்கங்கள்-16 | 20.கார்த்திகை.2022 | விலை–50.00

பாபு தையல் இயந்திரம்
திருத்துமிடம்



0776906182


# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி
நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713564443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –390

## கொலை,கொள்ளை,கற்பழிப்பு,ஆள்கடத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த ரெலோ TNA கட்சிக்குள் இருந்துகொண்டு விபச்சார வீடு என கூறுவது நியாயமானதா?



## பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள 2023 வரவு – செலவுத் திட்டம்

## போதைப்பொருளுக்கு எதிராக ஒரு படைப்பிரிவு?



# கொலை,கொள்ளை,கற்பழிப்பு,ஆள்கடத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த ரெலோ TNA கட்சிக்குள் இருந்து கொண்டு விபச்சார வீடு என கூறுவது நியாயமானதா?

தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டதொன்று என்பது அனைவராலும் அறியப்பட்ட விடயம். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பை சீர் குழைப்பதற்கு அதை இல்லாமல் செய்வதற்கு ஏற்கனவே அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த ரெலோ புளொட் மூலம் அதனை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் அண்மைக்காலமாக செயற்பட்டு வருகின்றது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டுடன் பயணித்து வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைப்பதற்கான பல வழிமுறைகளை அரசாங்கம் கடந்த நல்லாட்சியிலும் கையாண்டது. தமிழீழ விடுதலைப்புலிகளின் நிழல் அரசியலை தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்துவருகின்றஅதேநேரம்அதில்இருக்கின்ற அங்கத்துவ கட்சிகள் ஒவ்வொன்றாக த.தே கூட்டமைப்பிலிருந்து விலகி வந்த நிலையில் தற்பொழுது ரெலோ புளொட் தமிழரசுக் கட்சி இந்த மூன்று கட்சிகளுக்குள்ளும் பிளவுநிலை ஏற்பட்டுள்ளது. இந்த பிளவுநிலையை சீர்செய்துகொள்ளும் வகையில் பல தடவைகள் தமிழரசுக் கட்சியினுடனான சந்திப்புக்கள் இடம்பெற்ற பொழுதும் தொடர்ந்தும் சுமந்திரன் அவர்களின் செயற்பாடுகளினால் தொடர்ந்தும் ஒன்றிணைந்து பயணிக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

ஆரம்பத்தில் கஜேந்திரகுமார், பின்னர் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி, ஈபி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகிய மூன்று கட்சிகளும் தொடர்ச்சியாக வெளியேறியதை தொடர்ந்து தமிழரசுக் கட்சி ரெலோவையும் புளொட்டையும் இணைத்து செயற்பட்டு வருகின்றது. ரெலோ மூன்று ஆசனத்தையும் புளொட் ஒரு ஆசனத்தையும் தம்வசப்படுத்தியுள்ள நிலையில் தமிழரசுக் கட்சிக்கு சவாலாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு சவாலாகவும் அவர்களது செயற்பாடுகளை அண்மைக்காலமாக செயற்படுத்தி வருகின்றனர். தமிழரசுக் கட்சியின் அரசியல் சார்ந்தவர்களின் இன்றைய அரசியல் நிலைப்பாடு என்னவென்றால் ஆயுத கட்சிகளின் பக்கபலமின்றி குறிப்பாக வடகிழக்கில் 13 ஆசனங்களை பெறமுடியும் என்பதே. அவ்வாறான அவர்களின் கருத்தாடல் என்பது ஒரு நகைப்புக்குரிய விடயமாகும். குறிப்பாக எதிரிகளுக்கு சாதகமாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிளவு அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. பதவி மோகங்களுக்காக தமிழ் தேசியத்தை விற்று பிழைக்கின்ற அரசியல் கட்சியாக தற்பொழுது ரெலோ மாற்றம் பெற்றுள்ளமை கவலைக்குரிய விடயம்.

ரெலோ அமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்வினோதராதலிங்கம் அண்மையில் ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்தாடல் என்பது பெறும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

**கூட்டமைப்பை விமர்சித்த வினோகரலிங்கம்**

நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி தமிழ் மக்களின் உரிமைக்காக கடைசிவரை இணையப்போவதில்லை. விக்கினேஸ்வரன் ஐயா அண்மையில் பிரிந்து செயற்படுவது தொடர்பில் நாங்கள் உணர்ந்திருக்கின்றோம் எனக் கூறினார். முழுக்க முழுக்க அவர் தான் காரணம். அவர் உடைப்பதற்காக, சிதைப்பதற்காக, அவருடைய நிகழ்சி நிரலை கொண்டு சென்று விட்டு இன்று கூட்டமைப்பில் இருந்து பிரிந்திருப்பதை உணர்ந்திருக்கின்றேன் என்கிறார். தமிழ் மக்களின் கூட்டுக்குள் அவர் மிகப்பெரிய ஒரு குற்றவாளி.

அதேபோல் தான் ஏனையவர்களும். கூட்டமைப்பு என்பது பலமான ஒரு சக்தி. அதில் தவறுகள் இருகின்றன. **அண்மையில் கூட்டமைப்பை பற்றி எனது முகநூலில் விமர்சனம் செய்தேன். கூட்டமைப்பு ஒரு விபச்சார இல்லமாக செயற்படுவதாக நான் குறை கூறினேன்.**

அங்கத்துவ கட்சி ஒன்றின் செயலாளர் என்னுடைய கட்சியின் தலைவருக்கும், செயலாளருக்கும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளார். முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் கட்சியின் சின்னத்தை விபச்சார வீடாக விமர்சிப்பதாக தெரிவித்து கடிதம் வந்தது. நான் விமர்சிப்பேன். தொடர்ந்தும் விமர்சிப்பேன். உள்ளுக்குள் இருந்தாலும், சரி வெளியில் இருந்தாலும் சரி தொடர்ந்தும் விமர்சிப்பேன். ஏனென்றால் இந்த கட்சியை போராளிகள், ஏனையவர்கள் இணைந்து உறுதியான நிலைப்பாட்டோடு வளர்தெடுத்தடுத்தவர்கள்.

அதற்காக பாடுபட்டவர்கள் நாங்கள். இவர்கள் தாங்களது சொந்தக் கட்சியை வளர்தால் கூட அது கூட்டமைப்பின் பிரச்சனை தான். தமிழரசுக் கட்சிக்குள் ஆயிரம் பிரச்சனை இருக்கலாம். அதனை நாங்கள் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு விமர்சிப்போம். தமிழரசுக் கட்சிக்குள் பிளவு என்றாலும் கூட்டமைப்புக்கு பாதிப்பு தான். றொலோவுக்குள் பிளவு என்றாலும், புளொட்டுக்குள் பிளவு என்றாலும் கூட்டமைப்புக்கு பாதிப்பு தான். அதனையே பொது வெளியில் கூறுகின்றோம். அதற்கு பிறகு தமிழரசுக் கட்சிக்குள் இருந்தே அந்தக் கட்சியை விமர்சிக்கிறார்கள். அதுவும் தவறு தானே. நாங்கள் விமர்சித்தால் பிழை. ஆனால் ஒரே கட்சிக்குள் விமர்சித்தால் பார்த்துக் கொண்டு இருகிறார்கள். அந்தச் செயலாளர் இப்போது பார்த்துக் கொண்டு தானே இருக்கிறார். விளக்கம் கேட்டாரா? தவராசா தவறு விடுகின்றார் என்று விளக்கம் கேட்டாரா, சிறிதரன் தவறு விடுகின்றார் என்று விளக்கம் கேட்டாரா? அல்லது சுமந்திரன் தவறு விடுகின்றார் என விளக்கம் கேட்டாரா? தவறுகள் கடந்த காலங்களில் எல்லாம் நடந்தது தான்.

நாங்கள் இனியும் திருந்துவதில் பலனில்லை. தமிழ் தலைவர்களில் எனக்கு நம்பிக்கையில்லை. ஒரு வருடத்திற்குள் தமிழ் மக்களுக்கு தீர்வு காணப்போவதாக அதிபர் சொல்கிறார். இவர்கள் விழுந்தடிக்துக் கொண்டு பேசுவோம் என்கிறார்கள். ஆனால் இவர்கள் ஒன்றுபட்டு போய் அங்கு பேசப்போவதில்லை. ஒரே கட்சியாக இருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மணிவண்ணன் இன்று இரண்டு கட்சியாகிவிட்டார்கள். இதேபோல் நாளை எத்தனை கட்சிகள் எப்படி எப்படி உடையப் போகுதோ தெரியாது.

ரணிலுடன் பேச முற்பட்டால் சிலர் பேச முடியாது, சிலர் நிபந்தனை போட்டினம், அப்படி, இப்படி என சொல்வார்கள். நாங்கள் ஒன்றுபட மாட்டோம் என அவர்களுக்கு தெரியும். அதனால் பிரச்சனைக்கு தீர்வு இல்லை.

முன்னாள் போராளிகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் வழங்க அனுமதி தர வேண்டும் என நாடாளுமன்றத்தில் பேசினேன். ஆனால், அவர்கள் வேறு காரணங்களை கூறி நிராகரித்து விட்டார்கள். போராளிகள் மத்தியில் ஒற்றுமை வராது என சொல்வதற்கு இடம் கொடுக்க முடியாது. ஒற்றுமையாக செயற்படுங்கள். அன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சி இயங்குமாக இருந்தால் குறித்த ரெலோ, புளொட், ஈபி.ஆர்.எல்.எப் மற்றும் ஏனைய கட்சிகளும் வடகிழக்கில் ஓரங்கட்டப்படுகின்ற ஒரு நிலைமையே தோற்றுவிக்கப்படும்.

ஆகவே குறித்த கட்சிகளும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயங்கரவாத தடைச்சட்டம் விதிக்கப்படக்கூடாது என்பதில் விழிப்பாக இருப்பது மட்டுமன்றி அவ்வாறான ஒரு நிலை தோற்றுவிக்கப்படுமாக இருந்தால் தாம் நிச்சயமாக ஓரங்கட்டப்படும் நிலை உருவாகும் என்பதால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஓரங்கட்டப்பட வேண்டாம் என்று அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தமும் செய்யப்பட்டது என்ற தகவலும் தற்பொழுது கசியவந்துள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கு



போராளிகளுக்கு உதவி செய்ய போவதாக சொன்ன யாழ் ஊடகவியலாளர் இன்று இங்கு இருப்பவர்கள் உதவி செய்ய வருவதை குற்றம் சாட்டுகின்றார். அன்று அவர் உண்மையில் போராளுக்கு உதவி செய்ய சென்றாரா அல்லது தன்னுடைய நலன்களுக்காக சென்றாரா என்பது கடவுளுக்கே வெளிச்சம்" எனத் வினோதரலிங்கம் அவர்கள் தெரிவித்திருந்தார்.

த.தே.கூட்டமைப்பு என்பது ஒரு விபச்சார வீடு என்ற தோரணையில் அவர் பேச்சுக்கள் அமையப்பெற்றது. தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பு ஒரு விபச்சார கட்சியை உருவாக்கியிருக்கின்றது என்று கூற வருகின்றாரா அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இணைந்த கட்சிகள் அதனை ஒரு விபச்சார விடுதியாக மாற்றிவிட்டார்கள் என்பதை கூறவருகின்றாரா அதில் அவருக்குத் தான் வெளிச்சம். **எது எவ்வாறிருப்பினும் கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல்லெறியும் ஒரு செயற்பாட்டையே ரெலோ கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோகராதலிங்கம் நடத்தி காட்டியிருக்கின்றார்.**

கடந்த காலங்களில் அரசாங்கத்துடன் இணைந்து இவர்கள் எவ்வாறு செயற்பட்டார்கள் என்ற நடைமுறைகள் மக்கள் அறிந்ததே. தமிழ் தேசிய கூட்டமைப்புக்கள் இவர்கள் இணைவதற்கு முன் தமிழீழ விடுதலைப்புலிகள் ரெலோ, புளொட், ஈபி. ஆர்.எல்.எப் தமிழர் விடுதலை கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட நிலையிலே அவர்கள் உள்வாங்கப்பட்டார்கள்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பொறுத்தவரையில் தேசிய பொருளாதாரத்தினால் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் டயஸ் போராக்களிடம் கையேந்துகின்ற நிலைமையே தற்பொழுது தோற்றம் பெற்றுள்ளது. இந்த நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு ஒரு இணைப்பு பாலமாகவே குறித்த கட்சிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகி சென்ற பலர் மீளவும் தாம் அரசியலில் பிரவேசிக்க முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னாள் வடமாகாண சபையினுடைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணியில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற அனைவருமே கூறும் காரணம் தமிழ் செயற்பாடுகளுக்கு த.தே.கூ ட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்பதாகும். கட்சிக்கு முரணான செயற்பாடுகளில் களமிறங்கிக்கொண்டு கட்சியை பார்த்து திட்டுவதும் அல்லது நயவஞ்சகதனத்தினால் அதற்கு சதிசெய்வதும் இவர்கள் தமிழினத்துக்கு செய்கின்ற துரோகம் என்றே கூற வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பானது ஒன்றிணைந்து செயற்படுகின்ற காலங்களில் மட்டுமே தமிழினம் பல நன்மைகளை பெற்றிருக்கின்றது. இலங்கையின் நீண்டகால வரலாற்றின் பின்னர் எதிர்க்கட்சி வரிசையில் த.தே.கூட்டமைப்பு அமைந்திருந்தது. அது மட்டுமன்றி கலைக்கட்பட்ட பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு சுமந்திரன் தலைமையிலான அணி பெரிதும் பங்காற்றியிருந்தது.

வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தில் நல்லாட்சி அரசாங்கத்தினால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அரசியல் கைதிகள் கணிசமான அளவு விடுதலை செய்யப்பட்டனர். ஒரு ஜனநாயக வழியில் தொடர்ந்தும் த.தே.கூட்டமைப்பு தனது செயற்பாடுகளை முன்னெடுத்து கொண்டிருந்தது. தற்பொழுதும் முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றது.

**IIஆம் பக்கம் பார்க்க...**

**-சுழியோடி-**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

### ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசியலும் தோல்வியில் முடியப்போகின்றதா?

ஒரு நாட்டில் பொருளாதாரம் என்பது மிக அத்தியாவசியமானதொன்று. அதனுடைய செயற்பாடுகள் குன்றிப்போகுமாக இருந்தால் குறித்த நாட்டின் அனைத்து வளங்களும் பாதிக்கப்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. டி.எஸ். சேனநாயக்க தொடக்கம் ரணில் விக்ரமசிங்க வரை 18 ஆட்சியாளர்களுடைய இலங்கையின் அரசியல் பொருளாதார நிலைமைகளை எடுத்துக்கொண்டால் பெரும்பாலும் இனவாத மதவாத தேசியவாத அரசியலையே மேற்கொண்டுவந்தனர். மற்றும் மேற்கொண்டும் வருகின்றனர்.

ஆகவே இவை மாற்றம்பெறும் வரையிலும் ரணில் விக்ரமசிங்க தலைமையோ அல்லது மகிந்த தலைமையோ சந்திரிக்கா தலைமையோ ஜே.வி.பி தலைமையோ ஒரு மாற்றத்தை இந்த நாட்டிற்குள் கொண்டுவர முடியாது என்பது இன்றைய நிலைப்பாடு. இன்றைய இவர்களின் அரசியல் என்பது தமிழ் கட்சி செயற்பாடுகளை வலுப்படுத்தும் ஒரு செயற்பாடாகவே காணமுடிகின்றது. கொரோனா வைரசினுடைய தாக்கம் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு குந்தகமாக அமைந்திருந்தது அதனை சீர் செய்யாது எழுந்தமானத்தில் பாராளுமன்ற தேர்தலை வைக்க நேர்ந்ததால் கோட்டபாய ராஜபக்ச தலைமையிலான அரசு தொடர்ந்தும் பொருளாதாரத்திற்குள் சிக்கியது. இந்த பொருளாதாரத்தை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஆட்சி மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு அறவளி போராட்டம் வரையிலும் நிலைமை கொண்டுசெல்லப்பட்ட பொழுதிலும் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தமக்குள்ளான போட்டி அரசியலை செய்வதற்கு தமிழ் முஸ்லிம் தரப்புக்களை ஒரு பகடைக்காய்களாக பயன்படுத்துகின்றார்களே தவிர தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் தொடர்பில் அவர்களுக்கு எந்த யோசனையும் கிடையாது.

ஒரு இனத்தில் விடுதலை போராட்டம் 30 ஆண்டுகாலமாக ஏன் இடம்பெற்றது என்பதும் அதற்கான தீர்வு என்ன என்பது பற்றியும் அக்கறை கொள்ளாதவர்களாகவும் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் கொலை செய்யபட்ட 1 இலட்சத்து 40 ஆயிரம் பேர் என்ன ஆனார்கள் என்பது பற்றியும் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் பேராட்டம் வடகிழக்கிற்கான ஒரு தீர்வு திட்டம் போன்றவையும் கிடப்பில் போட்ட விடயமாகவே அரசாங்கம் அதனை பார்க்கின்றதே தவிர பொருளாதார சகுதிக்குள் சிக்கியுள்ள இலங்கையை கட்டியெழுப்புவதற்கான நகர்வுகளை எந்த தரப்பும் நகர்த்தவில்லை. தொடர்ந்தும் நாடுகளுக்குள் கையேந்தும் அரசியலையே இவர்கள் செய்துவருகின்ற அதே நேரம் தற்பொழுது டயஸ்போராவினுடைய உதவியையும் நாடியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் என்பது சிங்கள இனம் தமது பிரதேசங்களில் எப்படி சம உடைமையுடன் வாழுகின்றதோ அதே போன்று வடக்கு கிழக்கில் தமிழ் இனம் வாழ்வதற்கான ஒரு உரிமையை கோரி போராட்டம் இடம்பெற்றது. அப் போராட்டத்தை சிதைக்கும் நோக்கில் அவ்வினத்தின் மீதும் போராளிகள் மீதும் பயங்கரவாத தடைச்சட்டத்தை விதித்து தொடர்ந்தும் தனது அரசியல் நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளுடன் இணைத்து தமிழ் மக்களுக்கான தீர்வையும் இல்லாதொழிப்பதற்கு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்பது புலப்படுகின்றது. இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் இங்கிருக்கும் தமிழ் முஸ்லிம் தரப்புக்களும் இணைந்து செயற்பட்டாலேஒழிய சிங்கள தலைமைகளினால் சிங்கள மக்களினால் எமக்கான ஒரு தீர்வு திட்டம் வரப்போவதில்லை. தொடர்ந்தும் இந்த நாட்டை பொருளாதார சிக்கலுக்குள் இருப்பதையே சர்வதேச அபிவிருத்தியடைந்த நாடுகள் எதிர்பார்க்கின்றது. காரணம் இலங்கையில் தமது அரசியலை எவ்வாறு கொண்டுசெல்வது என்பதிலே அவர்கள் குறியாக இருக்கின்றார்கள்.

தேசிய நலன்களில் அக்கறை கொள்வதாக காட்டிக்கொண்டிருக்கின்ற இந்தியா சீனா அமெரிக்கா போன்ற நாடுகள் தமது அரசியல் நலன்களுக்காக இலங்கையின் வளங்களை குறிப்பாக தரை. கடல் ஆகாயம் போன்றவற்றை நீண்ட ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு செயற்படுகின்றார்கள். இதில் மாற்றம் கொண்டுவரப்படும் வரையிலும் இலங்கை அரசானது சர்வதேசத்திடம் ஒரு சரணாகதி அரசியலையே செய்யவேண்டிய நிலைப்பாடு தொடர்ந்தும் இருக்கும். மாற்றத்திற்கான வழிகளை உருவாக்குகின்றோம் என மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் வாக்குறுதிகளை வழங்கினாலும் சர்வதேச பிடியில் இருந்து மீள்வதற்கான வியூகங்களை அமைத்து செயற்படாமையே தொடர்ந்தும் இலங்கையினுடைய புவிசார் அரசியல் செயலிழந்து போனமைக்கான காரணங்களாக அமைந்துள்ள இதனை சீர் செய்து இலங்கை அரசியலை மேற்கொண்டால் மட்டுமே இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பது இன்றைய யதார்த்தம்.

# 195 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



### கெரில்லா எதிர்ப்பு வான்வழிப் படைகளின் "இரட்டைப் பாய்ச்சல்" நகர்வு

"இரட்டை பாய்ச்சல் நகர்வு உலங்குவானூர்தியிலிருந்து தரையிறங்கிய பின்னர் இரு குழப்படைகள் தமத நகர்வுத் திசையில். கெரில்லாக்களை முற்றுகையிடும் நோக்கில் அவர்களைத் தாக்குகின்றனர். வழக்கமாக இக்குழுக்களில் ஒன்று கெரில்லாக்கள் தங்கியிருக்கின்ற இடத்திலிருந்து ஒப்பீட்டளவில் அருகில் தரையிறக்கப்படுவதுடன். கெரில்லாக்களின் சுதந்திரத்தைப் பறிக்கும்வண்ணம் சமரையும் தொடுக்கின்றது. இந்நேரத்தில் இரண்டாவது குழு மறைப்பாகக் கெரில்லாப்படைகளின் பின்புறத்திற்கு வரவேண்டும். அங்கு வந்தும் அவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ள வேண்டும். (படம் 5)

### கெரில்லா எதிர்ப்பு வான்வழிப் படைகளின் 'மடக்கலும் பட்டைப்பல்லும்" நகர்வு

"மடத்தலும் பட்டைக்கல்லும்" நகர்வு இரு குழுக்களால் அதிகமாக நீர்த்தடைகளுக்கு அருகில் மேற்கொள்ளப்படுகின்ற (பட்டடைக்கல்) குழு தங்கியிருக்கின்ற கரையின் மறுகரைக்குக் கெரில்லாக்கள் பின்வாங்கிச் செல்ல நிர்ப்பந்திக்கும் நோக்கில் பிரதான தாக்குதல் (மடத்தல்) குழு தாக்குதலைத் தொடுத்தலாகும். இதற்கடுத்தாக. (ஓரளவில் கெரில்லாக்களை முற்றுகையிடுவதை எட்டியபின்) இரு குழுக்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் கெரில்லாக்களை அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### பாரிய அழிவுகரும் ஆயுதங்களைப் பயன்படுத்தல்

கெரில்லாக்களை எதிர்த்து மேற்கொள்கின்ற சமர் நடவடிக்கைகளில் பெரியளவில் நஞ்சூட்டல் பதார்த்தங்கள். எரியூட்டல் மற்றும் புகையூட்டல் பதார்த்தங்கள். .ரசாயனப் பதார்த்தங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தவும் திட்டமிடப்படுகின்றது. இரசாயன கையெறிகுண்டுகள். விசிறல் பொதிகள். இணைப்புக்குண்டுகள். 16குழல் கொண்ட எறிகணை செலுத்திகள் போன்ற பயன்பாட்டில் உள்ள பொருட்களும்பயன்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. திரவ மற்றும் திண்ம விசிறல் வடிவிலான நஞ்சூட்டல் விசிறல் பதார்த்தங்களை விமானங்களிலிருந்து வீசவும் எண்ணப்படுகின்றது. இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதற்கான அறிகுறிகளாக பின்வருன விளங்குகின்றன.

**வளரிகளின் கண்டுகள் (வேருக்கு மேலேயுள்ள பகுதிகளனைத்தும் ) கொழுக்கி வடிவில் அல்லது சுருள் வடிவில் சுருங்கிப் போயிருக்கல்.**

**வளரிகள் வாடிப்போதல் அல்லது செத்துப்போதல்**

**வளரிகள் தமது ஆரம்பப் பச்சை நிறத்தில் இருக்கின்றபோதும் அவற்றில் வெடிப்புக் தோன்றுவதுடன், தடிப்பாகிப் போதலும்.**

**சில வளரிகளின் வேர்கள் உலர்ந்து போதலும் ஆகும்.**

### உயிரியல் ஆயுதக்கைப் பயன்படுக்தல்

கெரில்லாக்கள் தங்கியிருக்கின்ற பிரதேசத்திற்கு மேல் உயிரியல் பதார்த்த விசிறல்களை வான்வழியாக விசுறுதல். நோயைத் தோற்றுவிக்கின்ற பக்டீரியாக்களைக் கொண்டிருக்கின்ற நுண்ணுயிர்களையும் காவிகளையும் (பூச்சிகள்,புழுக்கள் போன்றன) பரப்புதல். முகவர்களின் நாசகார வேலைகள் போன்ற வழிவகைகள் மூலம் உயிரியல் ஆயுதங்கள் கெரில்லாக்களுக்குகெதிரான போரில் பயன்படுத்தப்படலாம். இவற்றில் முகவர்களின் நாசகார வேலைக்கே கூடுதல் முக்கியத்துவம் தரப்படுகின்றது. ஏனெனில். இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே கூடுதல் வெற்றியைப் பெறமுடிகின்ற அதே நேரத்தில். சுற்றிவரவுள்ள மக்களுக்கும் கெரில்லா எதிர்ப்புப்படைகளுக்கும் தீங்கும் ஏற்படுவதில்லை.

மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காகப் பின்வரும் நோய்களுக்கான தொற்றுக்களைத் தோற்றுவிக்கின்ற பொருட்கள் காணப்படுகின்றன. பிளேக். குதிரைத்தொற்றுநோய். சைபீரியப்புண். நரம்பையும் இதயத்தையும் தாக்குகின்ற தொற்றுநோய். துலரேமியா. மெலியோயிடோஸ்(பக்டீரியா நோய்கள்) கிளி நோய். இயற்கை அம்மை. டெங்கு காய்ச்சல் (வைரஸ் காய்ச்சல்) தைபோயிட் காய்ச்சல். சுசுகாமுஸ்கிக் காய்ச்சல். கூ காய்ச்சல். ஸ்காலிஸ்ட் மலைப்புள்ளிக் காய்ச்சல் (ரிக்கெட்சியோஸ் நோய்கள்) போன்றனவாகும்.

இன்றைய குறுஞ்சமர் அனுபவத்திலிருந்து செச்சினியப் பிரிவினைவாதிகளின் சான்றுகளின் பிரகாரம். ஆர்.பி.ஜி. - 7 எறிகணை செலுத்தியும் அதனது சுய திருத்திய வடிவங்களும் ரசியப் படைகளின் ஆளணிகளை அழிப்பதற்குரிய பிரதான கருவிகளாக மாற்றங்கண்டுள்ளன. பிரிவினைவாதிகளின் தாக்குதல் குழுக்களும் அவர்களது ஆயுதங்களும் மிகத்தரமானதாகும். அதாவது ஐந்துபேர் கொண்ட அவர்களது குழுவொன்றில் ஆர். பி.ஜி. - 7 ,ரண்டும் மேலதிகமாக ஆர்.பி.ஜி -22 அல்லது ஆர்.பி.ஜி - 18 ஐ ஒவ்வொருவரும் கொண்டிருக்கின்றார்கள்.

எங்களது பலப்படுத்தப்பட்ட நிலைகள் மீதான தாக்குதல் பெருமளவில் ஆர்.பி.ஜி., ஆர். பி.ஒ. "பெருந்தேனி" ("ஸ்மேல்") எறிகணை செலுத்திகளது பயன்பாட்டுடனேயே எப்பொழுதும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் தந்திரோபாயத்தின் வினைத்திறன் பற்றி ஆப்கானிஸ்தானில் எங்களது இழப்புக்கள் பற்றிய ஆய்வு தெரிவிக்கின்றது. மொத்தமாகக் கொல்லப்பட்ட 13700 பேர்களில் நேரடியாகச் சமர்களில் சுடுகலன் சூட்டுக்கு இலக்காகி மடிந்தவர்களின் தொகை அண்ணளவாக 35% ஆகும். ஆனால். சன்னச் சிதறல்களால் (பிரதானமாக எறிகணை செலுத்திகளின் விளைவால்) ஏற்பட்ட இழப்பு - 40% ஆகும்.

இவ்வாறான சமரில் சூட்டாயுதங்களில் சூடுகளது குறைந்தளவு வினைத்திறனை எனது சொந்த அனுபவம் உறுதிப்படுத்துகின்றது. ஆப்கானிஸ்தானில் வேவு - வான்குடைக் கொம்பனியின் உதவிக் கட்டளையாளனாக இருந்த நான். கிளர்ச்சியாளர்களின் நகர்வுப் பாதைகளில் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட பதுங்கித் தாக்குதலில் பங்கெடுத்திருந்தேன். 16 மார்ச் 1987 இல் ஒன்பது பேரைக் கொண்ட போராளிக் குழுவொன்று அழிக்கப்பட்டது. அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சூடுகளைப் பார்க்கப்போனால். உண்மையில் மிகப்பொருத்தமான இடத்திலிருந்தே. அதாவது மேலிருந்து கீழாக 25 -30 பாகை சாய்வாகவும் 50 - 60 மீற்றர் தூர இடைவெளியுடனுமே சூடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நிலவுக்காலம். இரவு அவதானிப்புச் சாதனங்கள் இருந்தமை ஆகியனவாலும் திகைப்புத்தன்மை எட்டப்பட்டதன் பலனாகவும் எதிரியின் எதிர்ப்பு மிகக் குறைவாகவே இருந்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக. எங்களது வீரர்களில் ஒவ்வொருவரும் 2 - 3 ரவைக்கூடுகளுக்குக் குறையாத வெடிபொருட்களைச் செலவழித்திருந்தார்கள்.

**தொடர்வான்....**

# போதைப்பொருளுக்கு எதிராக ஒரு படைப்பிரிவு?



நிலாந்தன்

"வடக்கில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கஞ்சா தொகையாகக் கைப்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து யாழ்ப்பணப் பகுதிக்கு மிகவும் பிரமாண்டமான முறையில் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இளம்சந்ததியினரும் அவற்றிற்கு அடிமையாகின்ற தன்மையானது வெகுவாக அதிகரித்துள்ளது. அந்த வகையில் இந்த துர்ப்பாக்கிய நிலையினை இல்லாதொழிப்பதனை நோக்கமாகக் கொண்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேயசுந்தர அவர்களினுடைய தலைமையில் விசேடபடைப் பிரிவானது உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அதனூடாக யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல்களை தடுத்தல், கைதுசெய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதனுடன் தொடர்புள்ள நபர்களை நீதி முன்நிறுத்துதல் போன்ற செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" இது பலாலி படைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பின் ஒருபகுதி.

அதாவது முடிவில் படைத்தரப்பும் போதைப் பொருளுக்கு எதிராக களத்தில் இறங்கிவிட்டது என்று பொருள்.தமிழ்மக்கள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் படைத்தரப்பு அவ்வாறு இறங்கும்.ஏற்கனவே அவர்கள் சந்திகளில் நிற்கிறார்கள்.ஏற்கனவே எஸ்.டி.எப் களத்தில் இறங்கிவிட்டது.சிலநாட்களுக்கு முன் எஸ்.ரி.எப் வவுனியாவில் தானும் களமிறக்கப்போவதாக அறிவித்திருக்கிறது. படைத்தரப்பு இயற்கை அனர்த்தக்கங்களின் போதும் பெருந்தொற்று நோயின் போதும் களத்தில் இறங்கியது. இலங்கைத் தீவில் மேலிருந்து கீழ்நோக்கிய மிகப் பலமான நிறுவன கட்டமைப்பை படைத்தரப்பு கொண்டிருக்கிறது. இலங்கை நாட்டில் அதிக ஆளணியையும் அதிக வளங்களையும் கொண்ட அரசு உபகரணம் அதுதான். எனவே இது போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் அவர்களை ஈடுபடுத்தும்.

ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், தீவின் மொத்த படைக்கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி தமிழ் பகுதிகளின் நிலை கொண்டிருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.தமிழ் கடல் பெருமளவுக்கு ஸ்ரீலங்கா கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. நாட்டின் படைக் கட்டமைப்பின் மூன்றில் இரண்டு பகுதி நிறுத்தப்பட்டிருக்கும் தமிழ் பகுதிக்குள் அதிகளவு போதைப்பொருள் நுகர்ப்படுகிறது என்றால் அதற்கு அப்பகுதியை கட்டுப்படுத்தும் படைத்தரப்பும் பதில் கூறவேண்டும் என்று தமிழ் அரசியல்வாதிகள் கேட்கிறார்கள்.

அண்மையில் இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து தெரிவித்திருந்தார்.மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் பின்வருமாறு கூறியுள்ளார்."இதனை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிறது. அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்". அதாவது போதைப்பொருள் வலைப் பின்னலுக்கும் குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கும் படைத்தரப்பு அல்லது காவல்துறையின் மீது அவர் மறைமுகமாக குற்றம் சாட்டுகிறார். இப்படிப்பட்ட ஒரு பின்னணிக்குள் படைத்தரப்பு போதைப் பொருளுக்கு எதிராக களமிறங்கியிருக்கிறது.

அவர்கள் களமிறங்குவதற்கு முன்னரே கடந்த சில வாரங்களாக தமிழ்ப் பகுதிகளில் பொலிஸீம் அதிரடிப் படையும் ஆங்காங்கே போதைப் பொருள் வலைப்பின்னலுக்கு எதிராக முன்னெடுத்துவரும் முறியடிப்பு நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் ஒப்பீட்டுளவில் அதிகரித்த அளவில் வெளிவருகின்றன. குறிப்பாக போதைப்பொருள் பாவனையாளர்களை, விநியோகஸ்தர்களைக் கைது செய்வது தொடர்பான செய்திகள் அடிக்கடி வெளிவருகின்றன.கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களோடு பொலிசார் காட்சியளிக்கும் படங்களும் ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன. இச்செய்திகளை தொகுத்துப்பார்த்தால் போதைப்பொருளுக்கு எதிரான முறியடிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதான ஒரு தோற்றம் நமக்கு கிடைக்கும்.

ஆனால் அரசின் சட்டம் ஒழுங்கைப் பேணும் அமைப்புகளால் மட்டும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு விடயம் இதுவல்ல என்பதனை நான் ஏற்கனவே பல தடவை எனது கட்டுரைகளில் சுட்டிக்காட்டியுள்ளேன். தமிழ்மக்களின் தேசிய இருப்பை சிதைக்கும் உள்நோக்கத்தோடு போதைப்பொருள் விநியோகம் திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுவதாக ஒரு சந்தேகம் பரவலாக உண்டு. சுமந்திரனும் சிறீதரனும் கூறுவதுபோல அது மேலிருந்து கீழ்நோக்கிய ஒரு திட்டமிட்ட செயலாக இருக்கக்கூடும். ஆனால் அதை எதிர்கொள்வதற்கு கீழிருந்து மேல் நோக்கிய ஒரு கட்டமைப்பை,சுய கவசங்களை தமிழ்மக்கள் கட்டியெழுப்ப வேண்டும். இதுதொடர்பில் கீழிருந்து மேல் நோக்கிய விழிப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். எனது நண்பர் ஒருவர் கூறுவதுபோல தமிழ்பகுதிகளில் கிராம மட்டத்தில் படைப்புலனாய்வுத்துறை வைத்திருப்பது போன்ற வினைத்திறன் மிக்க மேலிருந்து கீழ்நோக்கிய வலைப்பின்னல் நமது கட்சிகளிடமே கிடையாது.

தமிழ் இளையோர் மத்தியில் குறிப்பாக பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கு தனிய மேலிருந்து கீழ்நோக்கிய கட்டமைப்பை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்க முடியாது.மாறாக கீழிருந்து மேல் நோக்கிய சுயகவசங்களை தமிழ் மக்கள் கட்டி எழுப்ப வேண்டும். அதை தனிய மருத்துவர்களால் மட்டும் செய்ய முடியாது என்பதனைத்தான் அண்மை காலங்களில் கிடைக்கும் புள்ளிவிவரங்கள் நமக்குக் காட்டுகின்றன. மருத்துவர்கள் இதில் ஒரு பகுதிதான். மருத்துவ சிகிச்சைக்குமப்பால் ஒரு கூட்டுச்சிகிச்சை தேவைப்படுகிறது. அதைத் தனிய மருத்துவர்கள் மட்டும் செய்யமுடியாது. இளைய தலைமுறைக்கு தலைமை தாங்க இலட்சியப் பாங்கான தலைவர்கள் வேண்டும். இளைய தலைமுறையை இலட்சியத்தை நோக்கிச் செலுத்தப்பட்ட அம்புகளாக மாற்றினால் இது போன்ற துஷ்பிரயோகங்களுக்கு இடமிருக்காது. அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், அறிவுஜீவிகள்,சமயப் பெரியோர், கல்விச்சமூகம், படைப்பாளிகள்,ஊடகங்கள் என்று எல்லாத்தளங்களிலும் இருக்கக்கூடிய செயல்பாட்டாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.அக்கூட்டுச் செயற்பாட்டுக்கு அரசியல்வாதிகளோ அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களோ தலைமை தாங்க வேண்டும். ஆனால் அவ்வாறு தலைமை தாங்கும் தகுதியோ தரிசனமோ பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லை,பலமான குடிமக்கள் சமூகமும் இல்லை என்ற வெற்றிடத்தில்தான் போதைப் பொருள் பாவனை அதிகரிக்கிறது.

இதை ஒரு குற்றச்செயலாக மட்டும் கருதி அதற்குரிய முறியடிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. மாறாக இதை ஒரு கூட்டுநோயாக ஒரு பண்பாட்டு வெற்றிடமாக, ஒரு அரசியல் தலைமைத்துவ வெற்றிடமாக, உள்ளூர் தலைமைத்துவ வெற்றிடமாக, ஆன்மீக வறட்சியாக, இன்னபிறவாக தொகுத்துப் பார்க்கவேண்டும்.இதில் தனிய மேலிருந்து கீழ் நோக்கிய கட்டமைப்பை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்காமல் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மத நிறுவனமும் ஒவ்வொரு பாடசாலையும் தங்களுக்குள்ள கூட்டுப் பொறுப்பை உணரவேண்டும்.வீட்டில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே இறுக்கமான பாசப்பிணைப்பு இருந்திருந்தால் இடையில் ஒரு போதைப்பொருள் வியாபாரி நுழைந்திருக்க முடியாது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் உள்ளூர் தலைவர்களுக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் சமயப் பெரியாருக்கு இடையே இடைவெளி அதிகரிக்கும் பொழுது இது போன்ற துஷ்பிரயோகங்களும் அதிகரிக்கும். அந்த இடைவெளி எங்கிருந்து வந்தது? என்று கண்டுபிடிக்க வேண்டும்.

போட்டிக்கல்வி முறைமையானது பாடசாலைகளின் மதிப்பைக் குறைத்துவிட்டது. இதனால் பாடசாலை ஆசிரியர்கள் பிள்ளைகளின் மீது செல்வாக்குச் செலுத்துவதில் வரையறைகள் அதிகரிக்கின்றன.

அண்மையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாணப் பிரிவும் யாழ் போதனா வைத்தியசாலையின் சம்பந்தப்பட்ட பிரிவும் இணைந்து இது தொடர்பான அறிவூறுத்தல்களை வெளியிட்டிருந்தன. ஒரு பள்ளிக்கூடப் பிள்ளை போதைப்பொருள் பாவனையாளராக இருந்தால் அதை கண்டுபிடிப்பதற்கு வேண்டிய அறிகுறிகளை அவர்கள் விவரமாக தெரிவித்திருந்தார்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால்.ஒரு பிள்ளையிடம் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுவதனை யார் கவனிப்பது?. அதைப் பெற்றோரும் ஆசிரியர்களும் தான் கவனிக்க வேண்டும். வீட்டில் உள்ள மூத்த தலைமுறை தான் அதைச் செய்ய வேண்டும். ஆனால் இன்றைக்கு மூத்ததலைமுறையின் கவனத்தைக் கலைப்பதற்கு பல விடியங்கள் வந்துவிட்டன. குறிப்பாக திரைத் தொடர்கள்,கைபேசிச் செயலிகள் போன்றவற்றை கூறலாம்.ஒரு முதிய தலைமுறை திரைத்தொடர்களின் கைதியாகிவிட்டது. நடுத்தர வயதுக்காரர்கள் கைபேசிகளின் கைதிகளாகி விட்டார்கள்.இது பொழுதுபோக்கைகளின் காலம். மூத்ததலைமுறை பொழுதுபோக்குச் சாதனங்களில் மூழ்கிக் கிடக்கும் பொழுது, இளைய தலைமுறை எங்கே போகிறது? என்ன செய்கிறது? யாருடன் தொடர்பை வைத்திருக்கின்றது? போன்றவற்றை கவனிப்பதற்கான நேரங்கள் குறைகின்றன.இவ்வாறான தொடர்ச்சியான அவதானிப்பும் கவனிப்பும் இல்லாத வெற்றிடத்தில் தான் போதைப்பொருள் நுழைகிறது.வாள்கள் நுழைகின்றன.

யாழ்.போதனா மருத்துவமனை வெளியிட்டிருக்கும் அந்தப் பிரசுரத்தில் காணப்படும் குணக்குறிகளை தொடர்ச்சியாகக் கவனிப்பது என்று சொன்னால் பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவையும் தொடர்ச்சியாகக் கவனிக்க வேண்டும்.அதாவது பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும். பிள்ளைகளுக்கும் ஆசிரியருக்கும் இடையே அதிகபட்ச தொடர்பாடல் இருக்க வேண்டும். எனவே போதைப் பொருட்களுக்கு எதிரான சுயகவசங்களை இங்கிருந்துதான் கட்டியெழுப்பத் தொடங்க வேண்டும்.

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசம் என்று கூறுகிறார்கள்.ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு சமூகமாக,பலமான ஒரு திரட்சியாக இல்லை என்பதனை அண்மையில் எரிபொருள் வரிசைகளில் கண்டோம்.இப்பொழுது அவர்கள் குடும்பமாகக்கூட இல்லையா என்று கேட்க வேண்டிய ஒரு நிலைமையை போதைப்பொருள் பாவனை ஏற்படுத்தியிருக்கிறதா?



# பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள 2023 வரவு செலவுத் திட்டம்



2023 ஆம் நிதி ஆண்டிற்கான முற்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமானது இலங்கையின் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்ரமசிங்க அவர்களினால் இன்றைய தினம் இலங்கையின் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இது இலங்கையின் 77வது வரவு செலவு திட்டம் என்பதுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்படுகின்ற முதலாவது வரவு செலவு திட்டமாகும்.

2023 ஆம் நிதி ஆண்டிற்கான இந்த வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கத்தின் செலவீனத்திற்கு 7885 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 21 ஆம் நூற்றாண்டின் நவீன உலகத்திற்கேற்ற புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பணி 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுடாக ஆரம்பிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

இலங்கையின் மிக நீண்ட கால 2023 - 2048 வரையான 25 ஆண்டுகால அபிவிருத்தி பிரபலமான தீர்மானங்களிலன்றி சரியான தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டது. இளைஞர் யுவதிகளின் சிறந்த நாளைக்கான எதிர்காலத்திற்கான ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் பணி நிறுத்தங்கள் போன்ற பாரம்பரிய அணுகுமுறைகளை தாண்டி புதிய அணுகுமுறை மற்றும் புதிய வேலைத்திட்டங்கள் மூலம் இளைஞர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ற புதிய பொருளாதாரத்தை உருவாக்குவோம்.

எனினும் வரவு செலவுத்திட்டத்தின் இலக்குகளை பார்க்கும்போது 7-8 சதவீத பொருளாதார வளர்ச்சி, சர்வதேச வர்த்தகத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 100 சதவீதமாக அதிகரித்தல், 2023-2032 வரை புதிய ஏற்றுமதி ஊடாக டொலர் 3 பில்லியன் வருடாந்தம் அதிகரித்துக்கொள்ளல், வருடாந்தம் டொலர் 3 பில்லியன் நேரடி வெளிநாட்டு முதலீடுகளாக பெறல், எதிர்வரும் பத்து ஆண்டுகளினுள் உயர்தேர்ச்சிபெற்ற சர்வதேசளவில் போட்டிமிக்க தொழிற்படையை உருவாக்குதல் ஆகிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட யோசனைகள் வருமாறு:**

**வரி செலுத்தப்படாமை அல்லது வேறு காரணங்களுக்காக இலங்கை சுங்கத்தால் தடுத்துவைக்கப்பட்ட வாகனங்களை சம்பந்தப்பட்ட வரி மற்றும் தண்டப்பணம் செலுத்தப்படுவதன் கீழ் விடுவிக்க யோசனை**

**2022–24 ஆம் ஆண்டு பருவ காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நீண்ட கால திறமை அடிப்படையில் அரச பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்வதனை 40 இலிருந்து 50 வீதம் வரை படிப்படியாக உயர்த்த யோசனை**

**வறிய பிரதேசங்களில் அமைந்துள்ள 1000 சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பாடசாலைகளுக்கு இலவச இணையத்தள வசதி**

**சிறைச்சாலை கைதிகளின் கழிவறை வசதிகளை மேம்படுத்துவதற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு**

**குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் ஊடாக விதிக்கப்படும் கடவுச்சீட்டு கட்டணம், விசாக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்களை அதிகரிக்க யோசனை**

**வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இளைஞர், யுவதிகளை பயிற்றுவிக்க தேசிய இளைஞர் மன்றத்திற்கு 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு**

**மதுபானங்களின் தரம் குறித்து பரிசோதிப்பதற்காக ஆய்வுகூடமொன்றை நிறுவ 100 மில்லியன் ஒதுக்கீடு**

**ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து உத்தேச சுகாதார மற்றும் காப்புறுதிக்காக நிதி ஒதுக்குவதற்காக ஊழியர் பொறுப்பு நிதிய சட்டமூலத்தை மறுசீரமைக்க யோசனை**

**வரி அறவிடுதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவை ஸ்தாபிக்க யோசனை**

**பிரஜைகளின் தனியுரிமையை பாதுகாப்பதற்காக தனிப்பட்ட தகவல்களை தயாரிக்கும் பிரிவிற்கு தகவல்கள் பாதுகாப்பு அதிகார சபையை ஸ்தாபிக்க யோசனை**

**10 விவசாய முயற்சியாண்மை கிராமங்களை ஸ்தாபிக்க யோசனை**

**மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளில் கழிவறை வசதிகளை மேம்படுத்துவதற்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு**

**வெளிநாட்டு உதவிகள் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்புடன் மத ஸ்தலங்களுக்கு சூரிய மின்கலங்களை வழங்க யோசனை**

**குடிநீர் போத்தல்களுக்கு பாதுகாப்பு முத்திரையை அறிமுகப்படுத்தவும் பின்தொடரவும் யோசனை**

**பதுளை, குருணாகல் மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளை போதனா வைத்தியசாலைகளாக தரமுயர்த்த நடவடிக்கை**

**பருவநிலை மாற்றம் தொடர்பாக சர்வதேச பல்கலைக்கழகத்தை ஸ்தாபிக்க திட்டம். ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு**

**இலங்கை விமான சேவைகள் நிறுவனம், ஸ்ரீ லங்கா டெலிகொம், கொழும்பு ஹில்டன் ஹோட்டல், வோட்டர்ஏஜ், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் அவற்றின் நிர்வாகத்தை மறுசீரமைக்க நடவடிக்கை**

**2023 ஆம் ஆண்டின் இறுதியில் அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு குறிப்பிடத்தக்களவு நிவாரணம் அளிக்க எதிர்பார்ப்பு**

**அரசாங்க வைத்தியசாலைகளில் வாட்டுகளுக்கு கட்டணம் செலுத்தும் முறைமையை மீள நடைமுறைப்படுத்த யோசனை. தேசிய மற்றும் ஆதார வைத்தியசாலைகளில் முதல் கட்டம்**

**விசேட பிரிவுகளை தவிர பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் 18 வருட சேவைக் காலத்தின் பின்னர் ஓய்வு பெறுவதற்கு இடமளிக்க யோசனை**

**தனியார் துறையில் பணிபுரியும் ஊழியர்கள் தொழிலை இழக்கும் பட்சத்தில் 03 மாத கொடுப்பனவு வழங்கக்கூடிய காப்புறுதி மற்றும் காப்புறுதி நிதியத்தை ஸ்தாபிக்க யோசனை**

**கஞ்சா செடிகளை ஏற்றுமதிக்காக மாத்திரம் பயிரிடும் இயலுமை குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக விசேட குழுவை நியமிக்க யோசனை**

**பொருளாதாரம் – ஊழியர்கள் ஆகிய இரு தரப்புகளும் அனுகூலம் பெறும் வகையில் புதிய தொழில் சட்டத்தை அமுல்படுத்த யோசனை**

**பயன்படுத்தப்படாத காணிகளை ஏற்றுமதி பயிர்ச்செய்கைக்காக வழங்கவும் விவசாய நிலங்களை குத்தகைக்கு கொடுப்பதனை இலகுவாக்கும் விதத்தில் புதிய சட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க யோசனை**

**நுண்கடன் வசதியை பெற்றவர்களை பாதுகாக்கும் நோக்குடன் நுண்கடன் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்**

**நீர் சறுக்கல் விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்கு யோசனை**

**பீடிக்கு 2 ரூபா வரி அறவிட யோசனை**

**கறுவா கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்காக தனியான திணைக்களம் ஒன்று நிறுவப்படவுள்ளது**

**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிறுவுவதற்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்**

**75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 2022 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளும் 75 மாணவ, மாணவிகளுக்கு வெளிநாடுகளில் பட்டப்படிப்பு மேற்கொள்ள புலமைப்பரிசில்**

**வெளிநாட்டு நிறுவனங்களை கவர்ந்திழுப்பதற்காக மேல், வடமேல் மாகாணங்கள், ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலையில் புதிய பொருளாதார வலயங்களை உருவாக்க யோசனை முன்வைக்கிறேன்**

**7 தொடக்கம் 8 வீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம் – ஜனாதிபதி தனியார் துறையில் முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்க வேண்டும். புதிய முயற்சியாண்மையாளர்களை உருவாக்க வேண்டும். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை புதிய கோணத்தில் கட்டியெழுப்ப முடியும்.**

வரவு செலவுத் திட்டம் குறித்து தமிழ் கட்சிகள் தங்களுடைய எதிர்ப்புகளை தெரிவித்திருக்கின்றார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் எந்தவொரு தீர்வும் கிடையாது இது பாதுகாப்பு படையினருக்கான வரவு - செலவுத் திட்டம் என்று குறிப்பிட்டிருக்கின்றார். நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த பொருளாதார நெருக்கடியில் இருக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்கல் என்ற விடயம் குறித்து எந்தவொரு விடயமும் வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை. அரசாங்கம் என்றால் எவ்வாறு மக்களின் பிரச்சனைகளை தீர்க்கப்போகின்றார்கள் என்பது தெரியவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் கிளிநொச்சி உமையபுரம் சோலைநகர் கிராமத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொதிகள் வழங்குகின்ற நிகழ்விலே கலந்துகொண்டு உரையாற்றும் பொழுது தெரிவித்திருந்தார்.

இதே வேளை மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் யுத்தமில்லாத நாட்டிலே என்ன காரணத்திற்காக இராணுவத்திற்காக அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அவ்வாறு நடந்திருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார். குறிப்பாக ஏன் இவ்வளவு இராணுவ முகாம்கள் இங்கே இருக்கின்றன ஏன் பாதுகாப்பு படையினருக்கு இத்தகைய நிதி ஒதுக்கீடு இங்கே மேற்கொள்ளப்படுகின்றது அதுபோன்று பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுக்கான வாக்கெடுப்பின் போது த.தே.கூட்டமைப்பு எதிர்த்தே வாக்களிக்கும் என்றும் அவர் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்.

அன்றைய நாளில் இடம்பெற்ற இரண்டாவது வாசிப்பு விவாதத்தின் போது பல்வேறு விடயங்கள் இங்கே குறிப்பிடப்பட்டிருந்தது. இதிலே செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்ட பல முக்கியமான விடயங்களில் இலங்கையில் இந்த முப்படைகளையும் சேர்த்து 9 இலட்சத்திற்கும் அதிகமான படைவீரர்கள் இருக்கின்றார்கள். இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் வடக்கில் இருக்கின்றார்கள். இவர்களுக்கான முகாம்களுக்காக மக்களின் காணிகள் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அபகரிக்கப்பட்டிருக்கின்றன. வடக்கு மாகாணத்தில் மக்களின் காணிகளிலே இராணுவத்தினரே வசிக்கின்றனர் விவசாய காணிகளிலே இராணுவத்தினரே விவசாயம் செய்கின்றார்கள் உணவகங்கள் சலூன்களை கூட இராணுவத்தினர் தான் நடத்துகின்றார்கள்.

சப்தகி
11ஆம் பக்கம் பார்க்க...



# "இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது"(நேர்காணல்)–பேராசிரியர் சி.பத்மநாதன்

யாழ்ப்பாணம்அராலியைபிறப்பிடமாககொண்ட பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கையின் வரலாற்றுப் பேராசிரியரும் கல்விமானும் ஆவார். லண்டன் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முனைவரான (Ph.D. in South Asian History, University of London) இவர், இலங்கையில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பணியாற்றியவர். வரலாறு, சமயம் தொடர்பிலான பல நூல்களை எழுதியவர். இவற்றில் 'இலங்கை தமிழ் சாசனங்கள்', 'இலங்கைத் தமிழர் வரலாறு', 'கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்' (கி.மு 250- கி.பி 300), 'The Kingdom of Jaffna', 'வன்னியர் யாழ்ப்பாணம்' போன்ற வரலாற்று நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

அண்மைக் காலமாக இலங்கையில் தமிழர்களின் தொன்மையான இருப்பை, மேம்பட்ட வாழ்வியலை தொல்லியல் சான்றுகளின் ஊடாக வெளிச்சத்துக்கு கொண்டு வரும் வகையில் அரும் பணியாற்றி வரும் பேராசிரியர் அவர்களை "இலக்கு" நேர்காண்கின்றது.

**கேள்விபுறச்சான்றுகளின் அடிப்படையில் இலங்கையில் தமிழர்களின் இருப்பு எவ்வளவு காலத்திற்கு முற்பட்டது என உறுதியாக நிறுவ முடியும்? அவ்வாறு கருதக்கூடிய முக்கிய சான்றுகளாக நீங்கள் எவற்றை எடுத்தாள்கின்றீர்கள்?**

தமிழர்களின் இருப்பு என்று சொல்வதிலும் பார்க்கதமிழ்மொழிபேசுவோரின்இருப்புஎன்று சொல்வது பொருத்தமானது. ஏனென்றால், தமிழ் மொழி பேசுவோரிடையே புராதன காலத்தில் இனக்கலப்பு ஏற்பட்டிருக்கின்றது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் இயக்கருக்கும்,

இடங்களில் நாட்டின் பலபாகங்களிலும் இந்தச் சின்னங்கள் அகழ்வாய்வுகளின் மூலமாக அறியப்பட்டுள்ளன. இவற்றின் ஆய்வுகளைப் பற்றிய விபரங்கள் தொடர்பாக மிக அரிதாகவே அறிக்கைகள் வெளிவந்தன.

பொன்பரிப்பு, மாந்தை, திஸ்ஸமகாரகம, அநுராதபுரம் ஆகிய இடங்களிலேயே தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன்வெளிநாட்டுஆய்வாளர்கள் பலர் அகழ்வாய்வுகளை கொண்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.வாளையஅயசயமயஅய

ஆனால் அவற்றைப் பற்றிய விபரக் குறிப்பு ஏடுகள் எதுவும் அங்கில்லை. அங்கு இருக்கின்றவர்களுக்கும் அவற்றிலே இருக்கின்ற எழுத்துக்களை தெரிந்து கொள்கின்ற தகமை காணப்படவில்லை. ளுடனைந6 1 ""இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது""(நேர்காணல்)-பேராசிரியர் சி.பத்மநாதன்
தொல்பொருள் திணைக்கள அனுமதி பெற்றே அந்நாட்களில் இவற்றை எம்மால் பார்க்க முடிந்தது. பார்த்து படமெடுப்பதற்கு



பேராசிரியர். எஸ்.பத்மநாதன்

அவற்றிற்கு முற்பட்ட காலத்திற்குரியவை. மட்டக்களப்பு வெல்லாவெளி, வந்தாறுமூலை, இலாவாணை, வேரம், வாகரை ஆகிய பகுதிகளிலும் திருகோண மலையில் அகஸ்தியர் ஸ்தாபனம், கோணேசர் கோவில் பகுதியில் காணப்படும் சின்னங்கள் கி.மு. 2ஆம், 3ஆம் நூற்றாண்டிற்கு உரியவை என்பதை எழுத்துகளின் உருவ அடிப்படையில் உறுதி செய்து கொள்ள முடிகின்றது.

கேள்வி -அகழாய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையிலும்கூட இலங்கையில் வேறு எந்தப் பகுதியையும்விட கிழக்கில் அதிக பிராமி வடிவங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. அதற்கான காரணங்கள் என்ன?

இதுவரை காலமும் தமிழ்ப் பிராமி வடிவங்களை அங்குள்ள எவரும் அறிந்திருக்கவில்லை. தாம் வாழும் சுற்றாடலிலும், காட்டுப் பகுதிகளிலும், வயல் நிலங்களிலும் இருக்கக்கூடிய பண்பாட்டுச் சின்னங்களை அவர்கள் அவதானித்திருந்தும் அவற்றினுடைய பெறுமதியை உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஏறக்குறைய 10 [illegible] 12 ஆண்டுகளுக்கு இடையில் தான் இதுபற்றிய உணர்வு ஏற்படலாயிற்று.

அங்கு தொழில் புரிகின்ற சில கலாசார உத்தியோகத்தர்களும், சில நவீன மருத்துவம் கற்ற வைத்தியர்களும், கல்லூரி ஆசிரியர் சிலரும் விநோதமான பொருட்களைக் கண்டு படங்களை எடுத்து அவற்றிலே ஏதோ அதிசயமான விபரங்கள் இருப்பதை உணர்ந்தார்கள். ஆனால் எழுத்துக்களை அவர்களால் புரிய முடியவில்லை.

நாவற்குடாவில் கலாசார உத்தியோத்தகராக

நாகருக்கும் இடையில் அமைந்த கலப்பினைப் பற்றிப் பேசுகின்றது. "இயக்கரோடு கூடி வலியராகி நாகர் நகரெல்லாம் ஆட்சி செய்தனர்" என்று அந்நூல் குறிப்பிடுகின்றது. காலவரையறை பற்றி பேசுமிடத்து தமிழ் மொழியானது இலங்கையைப் பொறுத்தவரையில் பெருங்கற்கால பண்பாட்டோடு தொடர்புடையது.

அந்தப் பண்பாடு கி.மு 8ஆம் நூற்றாண்டிலே இங்கு பரவத் தொடங்கி விட்டது. அண்மைக் காலத்தில் எமக்குக் கிடைத்த ஆதார பூர்வமான சான்றுகளின் அடிப்படையில் நாகர்களே பெருங்கற்கால பண்பாட்டை இலங்கையிலே பரப்பினார்கள். நாகர் மூலமாகவே தமிழ் மொழி பரவியது என்றும் கூறலாம்.

தமிழ் மொழியில் எழுதப்பட்ட அரும்பொருட்கள், பண்பாட்டுச் சின்னங்கள் பலவகைப்பட்டவை. அவை அன்றாட வாழ்வில் பயன்படுத்திய அம்மி, குளவி, உரல், ஆட்டுக் கல், எண்ணெய் வடிக்கும் செக்கு முதலானவற்றிலும், வழிபாட்டு சின்னங்களாகிய நாக வடிவங்கள், நாக சிற்பங்கள், சிவலிங்க வடிவம், சைவ சின்னங்களான நந்தி, வாகனங்களான எலி, நாய் ஆகியவற்றிலும் சில விநாயகர், வைரவர், அம்மன் போன்ற சைவ சமய வடிவங்களிலும் காணப்படுகின்றது. இது மட்டுமன்றி வழிபாட்டுத் தலங்களில் அடிமட்ட அத்திவாரங்களிலும்கூட தமிழ் மொழியில் எழுத்துப் பொறித்த நாகரைக் குறிப்பிடும் வசனங்கள் காணப்படுகின்றன.

அதேபோல பௌத்த சமய வழிபாட்டு சின்னங்களாகிய புத்தர் பெருமானுடைய சிற்பங்கள், போதிசத்துவர் வடிவங்கள், புத்தர் பாதம் முதலானவற்றிலும் தமிழ் மொழியில் நாகரைக் குறிப்பிடும் வசனங்கள் காணப்படுகின்றன.

**கேள்வி – இலங்கையில் தமிழரின் தொன்மையான இருப்பை எடுத்துக் காட்டும் முக்கிய தொல்லியல் சான்றுகளாக நீங்கள் எவற்றைப் பார்க்கின்றீர்கள்?**

தொல்லியல் அடிப்படையிலே தமிழர் பண்பாடு தொடர்பான மிக காலத்தால் முற்பட்ட தொல்பொருள் சின்னங்கள் பெருங்கற்கால பண்பாட்டை சேர்ந்தவை. அண்மைக் காலத்தில் பெருந்தொகையான

பெருந்தொகையான பெருங்கற்கால பண்பாட்டு சின்னங்கள் இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதியில் கிடைக்கின்ற போதிலும், அவை கந்தரோடையைத் தவிர ஏனைய இடங்களில் அகழ்வாய்வு செய்யப்படவில்லை.

கந்தரோடையிலும் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்பு Poul E Peirs நடத்திய மேலோட்டமான ஆய்வுகளைப் பற்றி அவர் கட்டுரைகளை எழுதியுள்ளார். 1966இல் தொல்பொருள் திணைக்கள அதிபராக இருந்த கொடக்கும்புர தலைமையில் கந்தரோடையில் மீண்டும் ஒரு அகழாய்வு தொட்டம் தொட்டமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவரும் தனது அறிவுக்கு எட்டியவாறு அங்கு கிடைத்த தொல்பொருட்கள் சிலவற்றைப் பற்றி ஒரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில், அங்கு அந்நாட்களில் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பல பொருட்கள் யாழ்ப்பாணத்து அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அதில் பலவகையான பொருட்கள் உள்ளன.

எழுத்துப் பொறித்த கலவோடுகள், மட்பாண்ட துண்டங்கள், வழிபாட்டுச் சின்னங்களாக பயன்படுத்திய சதுர வடிவ கற்கள் ஒன்று அல்லது இரண்டு பயன்பாட்டிலிருந்த கல்லில் குடையப்பட்ட நீர்த்தொட்டி ஒன்று, குளக்கட்டில் பாவனையில் இருந்த கல்லில் குடையப்பட்ட சிறிய கலன்கள் அவை மருந்துகள் செய்ய பயன்பட்டிருக்கலாம். இவற்றோடு மிகப் பெருமளவிலான மணிகள் பலவகைப்பட்டவை, அறுத்த சங்குகளின் துண்டங்கள் கண்டறியப்பட்டன. சங்குகள் காணப்படவில்லை. மணிகள் பெருமளவில் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி பாவனைப் பொருட்களான களி மண்ணில் செய்யப்பட்ட 4 அலகுகளைக் கொண்ட ஒரு அழகான விளக்கு, சில படிமங்களும் அங்கு காணப்படுகின்றன. ஆனால் இவை நெடுங்காலமாக ஒழுங்குபடுத்தப்பட்டு விபரக் குறிப்புக்களோடு வைக்கப்பட்டிருக்கவில்லை.

இப்பொழுதுதான்இவற்றைமரப்பெட்டிகளிலோ, அலுமாரிகளிலோ வைத்துப் பேணுகிறார்கள்.

அந்நிறுவனத்தில் உள்ளவர்கள் தமக்கு அனுமதி வழங்க அதிகாரம் இல்லை என்றே சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல இந்தக் கட்டுப்பாட்டுகளின் காரணமாகவும், அக்கறையின்மையாலும் புலமையாளர்கள், வரலாற்றாசிரியர்கள் இந்த அருங்காட்சியகத்தில் இருக்கின்ற தொல் பொருட்களை ஆராய முற்படவில்லை.

இதற்கிடையில 2011ஆம் ஆண்டு முதலாக யாழ். பல்கலைக்கழகமும், அவர்களுடன் தொல்பொருள் திணைக்களத்தினரும் சில அகழ்வுகளை நடத்தியிருக்கின்றார்கள். இது தொடர்பான எழுத்து வடிவமான அறிக்கைகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. சில பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டிகளில் இங்கு காணப்படும் பொருட்கள் பற்றி மிகச் சுருக்கமான விளக்கத்தை திரான் தெரணியகல வழங்கியுள்ளார்.

மாந்தையைப் பொறுத்தவரையில் அங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் எல்லாம் அநுராதபுரத்திலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை பார்ப்பது மிகவும் சிரமமானது.

நாங்கள் பேசுகின்ற நாகர் பற்றிய தமிழ் மொழி வளர்ச்சி பற்றிய பண்பாட்டுச் சின்னங்கள் பெரும்பாலும் அகழ்வாய்வுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படாதவை. மேலாய்வின் மூலமாக அறியப்படுபவை.

இவற்றிலே தமிழ் பிராமி வடிவங்களில் எழுத்துக்கள் இருப்பதால், அவற்றின் கால எல்லையை கி.மு மூன்றாம் நூற்றாண்டிற்கும், கி.பி ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவையாக வரையறை செய்து கொள்ள முடிகின்றது. சில எழுத்துக்களைப் பொறுத்தவரையில் வரிவடிவ வளர்ச்சியை எம்மால் வரையறை செய்ய முடிகின்றது.

மட்டக்களப்பிலுள்ள நாவற்குடா, நெடியமடு, பாலாமடு, திருகோணமலையிலுள்ள செம்பி மலை, வவுனியாவிலுள்ள நெடுங்கேணி ஆகியவற்றிலே காலத்தால் மிகவும் பிற்பட்ட ஓரளவு உருமாறிய தமிழ்ப் பிராமி வடிவங்கள் காணப்படுகின்றன. அவை நான்காம், ஐந்தாம் நூற்றாண்டிற்குரியவை. ஏனையவை

இருக்கின்ற எழில்வாணி பத்மகுமார் தான் முதன் முதலாக எம்மைத் தொடர்பு கொண்டு இவற்றைப் பற்றி எமக்கு அறிமுகம் செய்தார். அதன் விளைவாகவே இவற்றின் புகைப்படங்களை பெற்று ஆராய்ந்ததோடு அவை காணப்படும் இடங்களுக்கும் நாங்கள் பிரயாணம் செய்து நேரிலே அவதானித்து அந்தச் சமயங்களில் படங்களை எடுத்தோம்.

அதிக உயர்வான மலைகளிலும், காட்டுப் பகுதிகளிலும் உள்ளவற்றை என்னால் பார்க்க முடியவில்லை. மற்ற எல்லாவற்றையும் நேரிலே சென்று பார்க்க முடிந்தது. அம்பாறையிலுள்ள சங்கமன்கண்டி போய் அங்குள்ளவற்றை பார்க்க முடிந்தது. இது தற்செயலாகத் தான் கிடைத்தது.

நாங்கள் முதன் முதலாக வெல்லாவெளி, விவேகானந்தபுரம், படலைக்கல் என்னும் இடங்களுக்குச் சென்றோம். எம்முடன் இந்து கலாசார திணைக்களம் மட்டக்களப்பில் நடத்திய சாசனவியல் பயிலரங்கில் பங்கு கொள்வதற்காக இந்தியாவிலிருந்து வருகை தந்த தமிழ்நாடு தொல்லியல் துறை திணைக்கள சிரேஸ்ட சாசனவியலாளர்களான ராஜகோபால், வேதாசலம், சாந்தலிங்கம் முதலானவர்களும் வந்திருந்தார்கள்.

இந்த இடங்களில் காணப்பட்ட கல்வெட்டுக்களே முதலாவதாக எம்மால் கண்டறியப்பட்டது. பானை ஓடுகளிலும், காசுகளிலும் தமிழ் வாசகங்கள், தமிழ் பிராமியில் பொறிக்கப்பட்டிருப்பதை முன்பு சிலர் கண்டு அவற்றைப் பற்றி கட்டுரைகளை எழுதியிருந்தார்கள். ஆனால் கல்லிலே வெட்டப்பட்ட தமிழ்ப் பிராமி வடிவங்களிலான ஒரு கல்வெட்டு என்ற வகையில் இதுதான் முதலாவதாக கண்டுபிடிக்கப்பட்டது. அதிலே இஸ்காவு காலத்து ஆந்திர நாட்டு எழுத்துக்களின் செல்வாக்கு இருப்பதனால், இந்தக் கல்வெட்டு 4ஆம், 5ஆம் நூற்றாண்டிற்கு உரியது என்று நாம் அதை அடையாளப்படுத்தினோம்.

இவை பற்றிய செய்திகள் ஊடகங்கள் வாயிலாக மாத்திரம் சர்வதேச மட்டத்திலும் மிக வேகமாகப் பரவியது.

தொடரும்...

# சிங்கள மற்றும் பௌத்த மயமாக்கலே கடந்த காலங்களில் போராட்டங்கள் வெடிக்க காரணம்



இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சிங்கள மயமாக்கல் மற்றும் பௌத்த மயமாக்கலே தமிழ் மக்கள் மத்தியிலிருந்து போராட்டத்திற்கான களங்கள் திறக்கப்பட்டன. இந்த நாடு சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுவந்த பௌத்த மயமாக்கல் நிகழ்ச்சியே தமிழர்களை அகிம்சை ரீதியாகவும் ஆயுதம் தாங்கியும் போராடவேண்டிய நிலைக்கு தள்ளியது.

ஒரு பல்லினம் வாழும் நாட்டில் அந்தந்த இனங்களின் கலாசாரங்களும் கலாசார பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களும் பாதுகாக்கப்பட்டு அதன் எதிர்கால சமூகத்திற்கு வழங்கவேண்டிய உரிமை அந்தந்த சமூகத்திற்கு உள்ளது. அவ்வாறு இல்லாமல் ஒரு இனத்தின் ஒரு சமூகத்தின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களும் கலாசாரத்தினையும் அவர்களின் வரலாற்றினையும் அழித்து அந்த நாட்டில் அந்த இனத்தினை அடிமைகளாக மாற்றுவதற்கு ஒருசமூகம் முன்னெடுக்கும் செயற்பாடுகளே அந்த சமூகத்தினை போராட்ட நிலைக்கு கொண்டுசெல்கின்றது.

இந்த செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கும்போது இந்த நாட்டில் நாங்கள் பிரிந்து நின்று எங்களது தனித்துவத்தினை பாதுகாக்கவேண்டியது எங்கள் உரிமை என்பதை ஒரு இனம் தீர்மானிக்கும் நிலையினை ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் இந்த பௌத்தமயமாக்கலும் தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் வரலாறுகளை திரிவுபடுத்தி அழிக்கும் முயற்சிகளும் தமிழர்கள் பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் செயலணி உருவாக்கத்தின் மூலம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் என்பது திரைமறைவில் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுவது தற்போது பல்வேறு இடங்களிலும் வெளிப்படுத்தி நிற்கின்றது.வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகப்பகுதியின் தலை நகராக கருதப்படும் திருகோணமலையினை கடந்த காலங்களில் பௌத்தமயமாக்கல் மூலம் தமிழர்களின் தனித்துவத்தினை சிதைப்பதற்கு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது இலங்கை தமிழர்களின் வரலாற்று பொக்கிசமாகயிருக்கின்ற திருக்கோணேஸ்வரத்தினை பௌத்த மயமாக்க திட்டங்களை சிங்கள தேசம் தீட்டிவருகின்றதுடன் அதற்கான நடவடிக்கைகளை கடந்தகாலத்தில் ஆரம்பித்திருந்தாலும் இன்று அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கினைப் பொறுத்த வரையில் இதுவரையில் தொல்பொருள் செயலணி என்ற போர்வையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் குறிவைக்கப்பட்ட நிலையிலும் திருகோணமலையில் திருக்கோணேஸ்வரம் உட்பட பல பகுதிகள் இன்று சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுப்பதற்காக தொல்பொருள் திணைக்களம் என்ற திணைக்களத்தினை அரசாங்கம் முழுமையாக பயன்படுத்துதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா யகம்பத் கிழக்கு மாகாணத்திற்கு கொண்டு வரப்பட்டதே இவ்வாறான பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவே என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் திணைக்களமும் கிழக்கு மாகாண ஆளுனர் மற்றும் மகாவலி அபிவிருத்தி திணைக்களம் போன்றவை இணைந்து மிகச்சிதமான செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது.

திருக்கோணேஸ்வரமும் என்பது கி.மு.பல நூற்றாண்டு வரலாறுகளைக்கொண்டது இந்தியாவின் சமய குரவர்களினால் பாடல்பெற்ற தலமாகும். அதனை பௌத்தமயமாக்க வேண்டிய தேவை இன்று என்ன சிங்கள தேசத்திற்கு ஏற்பட்டுள்ளது என்பதை தமிழ் மக்கள் சிந்திக்கவேண்டும். குறிப்பாக திருக்கோணேஸ்வரப்பகுதியை புனித பூமி பகுதியாக அறிவிக்குமாறு சுமார் 50வருடங்களுக்கு முன்னரே தமிழர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதன் காரணமாக அன்றைய காலத்தில் அரசாங்கத்தின் பக்கத்திலிருந்த தமிழ் அமைச்சர் ஒருவரும் தனது அமைச்சு பதவியை துறந்து வெளியேறிய சம்பங்களும் நடைபெற்றன.

“16.01.1981ல் வெளியான 124ம் இலக்க தொல்பொருள் சட்டத்தின் கீழ் கோயில் அடங்கிய 372 ஏக்கர் நிலப்பகுதி தொல்பொருள் ஆய்வுப் பகுதியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது” என அச்செய்தி கூறுகிறது.

இச்சட்டம் வர்த்தமானியில் வெளியாகு முன்னர், இலங்கை நிலஅளவை நாயகம் சார்பாக 03.09.1976ஆம் திகதியில் வெளியிடப்பட்ட கோணேசர் ஆலயம் சம்பந்தப்பட்ட நில அளவை வரைவுப் படத்தின் பிரதி அடிப்படையில் அதில், ஆலயத்திற்கென மொத்தமாகவுள்ள 378 ஏக்கர் நிலப்பரப்பில் கோணேசர் கோயில், அருள்மலை, அதைச் சுற்றியுள்ள தோட்டம், தொலைத்தொடர்புக் கம்பம் அமைந்திருக்கும் மலை அடங்கிய 18 ஏக்கர் 1 றூட் 03 பேர்ச்சேஸ் இடமும், பாபநாச தீர்த்தம் அமைந்துள்ள பகுதியில் இரண்டு கிணறுகள், அருகேயுள்ள 3 கட்டிடங்கள், 1 சீமெந்து தளம் ஆகியவை அடங்கிய 3 ஏக்கர் 2 றூட் 1 பேச்சர்ஸ் இடமும் தவிர்ந்த ஏனையவகைகளை தொல்லியன் திணைக்களத்திற்கு வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டது.

எனினும் இதனை அனைத்தையும் மீறி அனைத்து பகுதிகளையும் ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளை கிழக்கு மாகாண ஆளுனர் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்துவருகின்றனர்.

குறிப்பாக திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு செல்லும் வழியில் ஆலயத்திற்கு அருகில் சுமார் 60க்கு மேற்பட்ட கடைகள் அமைக்கப்பட்டு சிங்களவர்களினால் வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த சிங்களவர்கள் 1997ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மாத்தறை பகுதியிலிருந்து திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகயிருந்த புஞ்சிநிலமே அவர்களினால் தனது அரசியல் பரப்புரைகளுக்காக கொண்டுவரப்பட்டவர்கள் என்பதுடன் அவர்களுக்கு இப்பகுதியில் தற்காலிக கொட்டகைகளும் அமைத்துக்கொடுக்கப்பட்டது. இன்று குறித்த 60பேருக்கும் அப்பகுதியில் நிரந்தர கடைகளை அமைப்பதற்கு கிழக்கு மாகாண ஆளுனர் நடவடிக்கையினை முன்னெடுத்துவருகின்றார்.

ஆனால் திருகோணேஸ்வரர் ஆலயத்தில் எந்தவித கட்டுமானப்பணிகளையும் முன்னெடுக்கவிடாமல் தொடர்ச்சியாக முட்டுக்கட்டையினை போட்டுவரும் தொல்லியல் திணைக்களம் சிங்களவர்களுக்கு கடைகளை அமைத்துக்கொடுப்பதற்கு ஆர்வத்துடன் செயற்படுகின்றது.

குறித்த கடைகள் வீடுகளுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டு அப்பகுதியில் சிங்களவர்களை நிரந்தரமாக குடியேற்றும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முனையும் நிலையில் திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகம் மற்றும் சமய அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆனால் இந்த விடயம் தொடர்பில் வடகிழக்கில் உள்ள தமிழ் தேசிய சக்திகள் மௌனம் காத்துவருவதே மிகவும் கவலைக்குரிய விடயமாகவுள்ளது.இதைவைத்து வெறுமனே அரசியல் ரீதியான பரப்புரைகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றதே தவிர இது தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

இது தொடர்பில்யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் அவ்வாறான செயற்பாடுகள் வீரியமற்ற நிலையிலேயே முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கில் கோணேஸ்வரர் ஆலயம் மட்டுமல்ல மட்டக்களப்பில் குடும்பிமலை, குசனார்மலை, தாந்தாமலை, வேலோடும்மலை உட்பட பல வரலாற்றுரீதியான தமிழர்களின் மிகவும் பழமையான அடையாளங்கள் இனங்காணப்பட்ட பகுதிகளிலும் தொல்லியல் திணைக்களமும் பௌத்த தேரர்களும் இணைந்து பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை கடந்த காலத்தில் முன்னெடுத்தபோதும் அதற்கு எதிரான குரல்கள் எழுந்த நிலையில் அவை இடைநிறுத்தப்பட்டன.அவை தற்காலிக இடைநிறுத்தமே தவிர நிரந்தர இடைநிறுத்தம் இல்லை.

இன்று கோணேஸ்வரத்தையே இல்லாமல்செய்ய அல்லது பௌத்தமயப்படுத்த முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் கிழக்கில் பாரியளவில் முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகளவில் காணப்படுவதன் காரணமாக இதனை தடுத்து நிறுத்தி கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றிடங்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உள்ளது.

ஆனால் அதற்குரிய போராட்டங்கள் வடகிழக்கு இணைந்ததாக முன்னெடுக்கப்படவேண்டும். வடகிழக்கில் தமிழர்களின் பலமான எதிர்ப்புகள் ஏற்படும்போதே இவ்வாறான பௌத்தமயமாக்கல்கள் நிறுத்தப்படுவதற்கான சாத்தியங்கள் ஏற்படுத்தப்படும்.இதனை உடனடியாக ஆரம்பிக்கவேண்டிய தார்மீக பொறுப்பு தமிழ் தேசிய பரப்பில் செயற்படும் அனைத்து தரப்பினருக்கும் உள்ளது. இதனை விரைவில் முன்னெடுக்க அனைவரும் கைகோர்க்க முன்வர வேண்டும்.



-நெற்றிபொறியன்-



# பிராந்திய செய்திகள்



## 2 வயது பெண் குழந்தையின் உடலில் ஐஸ் போதைப்பொருள்!

உயிர்கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையான தந்தையால் 2 வயதுப் பெண் குழந்தை யாழ்ப்பாணம் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றது. முல்லைத்தீவு, கொக்கிளாய் கிழக்கு பகுதியை சேர்ந்த 2 வயது பெண் குழந்தை காய்ச்சல் காரணமாக புல்மோட்டை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கிருந்து அவர் திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்




இந்நிலையில் வைத்தியர்களின் கோரிக்கை அடிப்படையில் குழந்தையை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பெற்றோர் சேர்த்தனர். இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இருந்து உடனடியாக குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டார்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது குழந்தையின் உடலில் ஐஸ் போதைப்பொருள் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் குழந்தையின் தந்தை உயிர்க்கொல்லி ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. குழந்தை வீட்டிலிருந்து போதைப் பொருளை விளையாட்டாக எடுத்து உட்கொண்டு இருக்கலாம் என்று விசாரணைகளில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## வங்காள விரிகுடாவில் காற்றமுத்த தாழமுக்கம் சில பிரதேசங்களில் இடைக்கிடை மழை பெய்யும்

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் அண்மையாகவுள்ள வட அந்தமான் கடற்பரப்புகளிலும் காணப்படுகின்ற குறைந்த அழுத்தப் பிரதேசம் பெரும்பாலும் ஒரு தாழமுக்கமாக வலுவடையக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. காற்றமுத்த தாழ்வு பகுதி மேற்கு- வடமேற்கு திசையில் நகர்ந்து நவம்பர் 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் இலங்கையின் வடக்குக் கரையை அண்மிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.



கிழக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலைநிலவும்என எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 11 மாதங்களில் 44 ரயில் தடம் புரள்வுகள்

இந்த ஆண்டில் இதுவரை 44 ரயில்கள் தடம் புரண்டுள்ளன. அன்றைய(18) தினம் இரண்டு ரயில்கள் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொத்துஹெர ரயில் நிலையம் அருகே ரயில் ஒன்று தடம் புரண்டது. மற்றைய தடம் புரள்வு பிலிமத்தலாவ புகையிரத நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில ரயில் பாதைகள் மற்றும் புகையிரதங்களும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இதற்குக் காரணம், நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாட்டால் ரயில்வே உதிரிப்பாகங்கள் மற்றும் ரயில்வேக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கொள்ளுப்பிட்டிக்கும் கொம்பனி வீதிக்கும் இடையிலான பாலம் உடைந்துள்ளமையால் கரையோரப் பாதையில் புகையிரத தாமதம் தொடரலாம் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து வெள்ளவத்தை வரை அனைத்து ரயில்களும் ஒரே ஒரு பாதையில் மட்டுமே இயக்கப்படுகின்றன. பழுதடைந்த பாலத்தை சீரமைக்கும் பணி தொடங்கியுள்ளதால், வரும் திங்கட்கிழமை முதல் கடலோரப் பாதையில் ரயில் வழக்கம் போல் இயக்கப்படும் என ரயில்வே திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.




## மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் பலி!

அன்றிரவு(18) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பண்டாரகம - மொரன்துடுவ பகுதியில் மோட்டார் சைக்கிள் பந்தயம் சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




வாத்துவ பொதுப்பிட்டிய பணாபிட்டிய வீதியை சேர்ந்த யசிரு சம்பத் பெர்னாண்டோ மற்றும் வாத்துவ தெல்துவ அரியகம பிரதேசத்தை சேர்ந்த சங்தேஷ் சுலோச்சன பியரத்ன ஆகிய 18 வயதுடைய இரு இளைஞர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞர்கள் இருவரும் களுத்துறை பண்டாரகம வீதியில் இளைஞர்கள் குழுவுடன் உல்லாசமாக மோட்டார் சைக்கிள்களில் பயணித்துக் கொண்டிருந்த போது. உயிரிழந்த இளைஞர்களின் மோட்டார் சைக்க ி ள்கள் நேருக்கு நேர் மோதி இந்த விபத் து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இரு இளைஞர்களுடன் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த ஏனைய இளைஞர்கள் விபத்தின் பின்னர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். மொரந்துடுவ பொலிஸார் வ ந்து வீதியில் படுகாயமடைந்து இருந்த இரு இளைஞர்களையும் மீட்டு மொரந்துடுவ கோனா து வ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## உரிய காலத்தில் NIC பெறாத விண்ணப்பதாரர்களுக்கு 2500 ரூபா அபராதம்!

ஆட்பதிவு சட்டத்தின் கீழ் சில விடயங்களுக்கான அபராதத் தொகை திருத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, 15 வயதை எட்டிய நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் தேசிய அடையாள அட்டையை பெறாத விண்ணப்பதாரர்களுக்கு அறவிடப்படும் அபராதத் தொகை 2500 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. திணைக்கள ரீதியான தாமதம் காரணமாக, முதல் விண்ணப்பத்திற்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தினால் இரண்டாவது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களிடம் 250 ரூபா கட்டணம் அறவிடப்படவுள்ளது.




திணைக்கள ரீதியான தாமதம் இல்லாத சந்தர்ப்பங்களில் முதற்தடவையாக தேசிய அடையாள அட்டை பெறாத விண்ணப்பதாரர்களிடம் 2500 ரூபா அறவிடப்படுமென ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது. இரட்டைக் குடியுரிமை சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்கள் நிறைவடைவதற்குள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத விண்ணப்பதாரர்களிடம் இருந்து 2500 ரூபா அபராதம் விதிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. போலி ஆவணங்கள் மற்றும் பிழையான தகவல்களை சமர்ப்பித்தல் உள்ளிட்ட, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய குற்றங்களுக்கும் 2500 ரூபா அபராதம் விதிக்கப்படுமென ஆட்பதிவு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு வவுனியா நகரில் பலத்த பாதுகாப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியாவுக்கு வருகை தருவதை அடுத்து நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடல் மற்றும் இணைப்பு காரியாலயம் திறந்து வைப்பு போன்ற பல நிகழ்வுகளில் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ள நிலையிலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விஜயம் மேற்கொள்ளவுள்ள பகுதிகளில் வெடிகுண்டு தகர்ப்பு பாதுகாப்பு பிரிவினர் , விசேட அதிரடிப்படையினர் , இராணுவம், பொலிஸார் என பலதரப்பினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன்,ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் போராட்டங்களை தடுக்கும் முகமாக கலகம் தடுக்கும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.




## பிக்பாஸ் 6வது சீசனில் கண்டிப்பாக அவர் தான் ஜெயிப்பார்– மகேஷ்வரி ஓபன் டாக்



பிக்பாஸ் 6வது சீசன் வீட்டில் இருந்து கடந்த வாரம் வெளியேறியவர் தொகுப்பாளினி மகேஷ்வரி. இவர் வெளியேறுவார் என மக்கள் யாருமே எதிர்ப்பார்க்கவில்லை. ஆனால் குறைந்த வாக்குகள் பெற்றார் என வெளியேறிவிட்டார்.

அவர் நிகழ்ச்சியில் இருந்து வெளியேறியதும் வீடியோக்கள் வெளியிட்ட வண்ணம் இருந்தார். இப்போது பேட்டி கொடுக்கவும் ஆரம்பித்துள்ளார்.

பிக்பாஸ் வீட்டைவிட்டு வெளியே வந்த பிறகு மகேஷ்வரி பேட்டிகள் கொடுத்துள்ளார். அப்படி ஒரு பேட்டியில், விக்ரமன் கண்டிப்பாக நூறு சதவீதம் இறுதி வரை வருவார்.

தனா மற்றும் அசீம் இல்லாத ஒன்று விக்ரமிடம் இருக்கிறது என்றால் அது சரியான நிலைப்பாடு தான். விக்ரமன் கண்டிப்பாக பலமான போட்டியாளர் என கூறியுள்ளார்.

## "ஜெயிலர்" படத்தின் புதிய அப்டேட்

ரஜினி தற்போது நடித்து வரும் திரைப்படம் 'ஜெயிலர்'. இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. நடிகர் ரஜினி தற்போது நெல்சன் திலீப்குமார் இயக்கும் ஜெயிலர் படத்தில் நடித்து வருகிறார்.




இந்த படத்தில் பிரபல கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகி பாபு, விநாயகன் மற்றும் வசந்த் ரவி உள்ளிட்ட பல முன்னணி நடிகர்கள் நடித்து வருகின்றனர்.

ஜெயிலர் சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, "ஜெயிலர்" படப்பிடிப்பு தளத்தில் நடிகர் சிவராஜ்குமார் இருக்கும் புகைப்படத்தை படக்குழு வெளியிட்டுள்ளது. ஜெயிலர் படப்பிடிப்பு தளத்தில் நடிகர் சிவராஜ்குமார் இந்த புகைப்படத்தை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் வைரலாக்கி வருகின்றனர்.

## மீண்டும் கமலுக்கு வில்லனாகும் முன்னணி நடிகர்



கமல் ஹாசன் அடுத்ததாக எச். வினோத் இயக்கத்தில் தன்னுடைய 233வது படத்தில் நடிக்கப்போவதாக தகவல் வெளியானது.

அதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்த நேரத்தில் தான் கமல் ஹாசன் - மணி ரத்னம் படத்தின் அறிவிப்பு வெளிவந்தது.

கமலின் 234வது படத்தை மணி ரத்னம் இயக்கவுள்ளார். இப்படத்தை ராஜ் கமல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயண்ட் ஆகிய மூன்று நிறுவனங்களும் தயாரிக்கிறது.

எச். வினோத் இயக்கத்தில் கமல் நடிக்கவிருக்கும் படத்தின் அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இப்படத்தில் கமலுக்கு வில்லனாக மக்கள் செல்வன் விஜய் சேதுபதி நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே விஜய் சேதுபதியை வைத்து எச். வினோத் படம் இயக்குவதாக இருந்தார் என்பதும், விக்ரம் படத்தில் கமலுக்கு வில்லனாக ஏற்கனவே விஜய் சேதுபதி நடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தெறிக்கும் வசூல் வேட்டையில் பிரதீப்பின் லவ் டுடே திரைப்படம்



தமிழ் சினிமாவில் சாதிக்க வேண்டும் என்றால் நிறைய உழைக்க வேண்டும். நமது படைப்பில் வித்தியாசங்கள் இருக்க வேண்டும். அப்படி ஒரு சூப்பர் டூப்பரான படத்தை இயக்கி மக்களின் மனதில் இடம் பிடித்திருப்பவர் இயக்குனரும், நடிகருமான பிரதீப்.

இவர் முதலில் ஜெயம் ரவியை வைத்து கோமாளி என்ற திரைப்படத்தை இயக்கி இருந்தார். அப்படம் ஜெயம் ரவிக்கு நல்ல ஹிட் படமாக அமைந்தது.

அப்படத்தை தொடர்ந்து பிரதீப் புதுமுகங்களை வைத்து இயக்கி, நடித்துள்ள திரைப்படம் தான் லவ் டுடே. இப்படத்தில் போன்களை மாற்றும் ஒரு விஷயம், அது மொத்த படத்தையும் கொண்டு செல்கிறது.

இளைஞர்கள் இப்போது இந்த படத்திற்கு மாபெரும் வரவேற்பை கொடுத்துள்ளார்கள். தற்போது வரை இப்படம் உலகம் முழுவதும் ரூ. 55 கோடி வரை வசூலித்துள்ளதாம்.

## புதிய ரிலீஸ் திகதியை அறிவித்த தனுஷ் படக்குழு

பிரபல தெலுங்கு இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் நடிகர் தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் "வாத்தி". பிரபல தயாரிப்பாளர் நாக வம்சி தயாரித்து வரும் இப்படம், நேரடியாக தெலுங்கிலும் வெளியாகவுள்ளது.

இப்படத்திற்கு தெலுங்கில் "சார்" என்றும், தமிழில் "வாத்தி" என்றும் தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது. வாத்தி சம்யுக்தா மேனன் கதாநாயகியாக நடிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைக்கிறார்.

சமீபத்தில் வெளியான இப்படத்தின் முதல் பாடல் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. "வாத்தி" திரைப்படம் வருகிற டிசம்பர் 2-ஆம் திகதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இப்படத்தின் புதிய ரிலீஸ் திகதியை படக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி, இப்படம் 2023-ஆம் ஆண்டு பிப்ரவரி 17-ஆம் திகதி வெளியாகும் என படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.



# காதல் கற்றுக் கொடுத்த பாடம்



"அழுகாத அகிலா, நான் அவனிடம் பேசிப்பார்க்கிறேன், உன்னை எப்படியும் ஆதியிடம் சேர்த்து வைக்கிறேன்", "நான் இருக்கும் பொழுது நீயேன் இப்படி வருந்திக் கொண்டிருக்கிறாய்" என்று அகிலாவிற்கு மகேஷ் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தான்.

அகிலாவும் ஆதியும் 3 வருடங்களாக காதலித்துக் கொண்டிருந்தனர். ஆனால் இப்பொழுது அகிலாவை தனக்கு பிடிக்கவில்லை என்றும் நான் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று கூறியதால் தான் அகிலா இப்படி அழுது கொண்டிருந்தாள்.

மகேஷீம் அகிலாவும் முகநூலின் வழியாக நண்பர்களானவர்கள்.

இருவரின் ஊரும் 20கிமீ தொலைவில் இருக்கும் என்பதால் அவர்களின் நட்பும் வளர்ந்து கொண்டே சென்றது.

மகேஷீம் வெண்ணில்லாவும் காதலித்து வந்தார்கள். வெண்ணிலா யார் என்றால் மகேஷின் உறவுக்கார பெண்தான். அவனுக்கு அத்தை மகள் முறை வேண்டும்.

மகேஷ் மாநிறமாக இருந்தாலும் அழகிய பெண்களை மயக்கும் தோற்றம் உடையவனாகவே இருந்தான்.

வெண்ணிலா மகேஷீன் தெருக்காரப் பெண் தான். அவள் தான் தன் காதலை முதலில் மகேஷிடன் தெரிவித்தாள்.

அப்பொழுது மகேஷிற்கு ஒரு 19 வயது தான் இருக்கும் அவனும் ஓகே என்று சொன்னாலும் முதல் காதலில் வரும் புதுவிதமான மயக்கமும் ஈர்ப்பும் இல்லாமல் இருந்தான்.

மகேஷை விட பேரழகிதான் வெண்ணிலா. ஊரில் உள்ள ஆண்களின் கனவுக் கன்னியாக இருந்தாள். இவளை மணக்க ஆயிரம் ஆண்கள் வரிசையில் நின்னாலும் இவளுக்கு பிடித்தது என்னவோ மகேஷைத்தான்.

அவன் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது வெண்ணிலா மகேஷுக்கு அடிக்கடி போன் செய்து கொண்டிருப்பாள். அவளின் காதல் தூய்மையானதாகவே இருந்தது.

மகேஷிடம் எப்பொழுது பேசினாலும் மாமா என்று தான் அழைப்பாள். எப்பொழுதாவது செல்லமாக போடா என்று சொன்னால் போதும் அந்த வாரம் முழுவதும் இதுனால பேசாமல் இருப்பான்.

மகேஷ் மரியாதையை எதிர்பார்ப்பான்.

வெண்ணிலா அவனை விட 3 வயது சிறியவள் ஆனால் குணத்திலும் பக்குவத்தில் மகேஷை விட 10 மடங்கு பெரியவளாக இருந்தாள்.

சொல்லப்போனால் அவளின் உண்மைக்காதலை இவன் அறியத்தவறித்தான் போனான். **எந்தவொரு பொருளும் தேடிக் கஷ்டப்பட்டு கிடைத்தால் தானே அதன் மதிப்பு என்னவென்று தெரியும், தானாக வரும் பொருளுக்கு மதிப்பு எப்பொழுதுமே இருக்காது.**

இவர்கள் இப்படி சண்டை போட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் தான் அகிலாவின் நட்பு கிடைத்தது.

மகேஷ் அகிலாவின் நட்பை தொடர நினைத்தான். அகிலாவின் பேச்சு இவனுக்கு அவள் ரொம்ப பக்குவமடைந்த பெண்போல் பேசுகிறாள் என்று தோன்றியது.

அவளும் தான் காதலித்த விஷயங்களை எல்லாம் மகேஷிடம் சொல்லுவாள். அப்படி ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது தான் அகிலா தன்னை மீறி கதறிக் கொண்டிருந்தால் தன் காதலன் என்னை ஏமாற்றி விட்டான் என்று.

நான் இனிமேல் உயிரோடு இருக்க மாட்டேன் மகேஷ். எனக்கு ஆதி ஒரு அப்பாவாக இருப்பேன் என்று சொல்லித்தான் என்னை காதலித்தான். அவனின் வார்த்தையால் நான் நம்பி ஏமாந்து விட்டேன் என்று கண்ணீர் வடிக்கிறாள்.

அகிலாவிற்கு அப்பா இல்லை, அவளின் 6 வயதிலே இறந்து போய்விட்டார்.

மகேஷ் ஆதியின் போன் நம்பரை வாங்கிக் கொண்டு அவனிடம் பேசினான் ஆனால் அவன் மகேஷையை வாயில் வந்தபடி திட்டினான்.

ஆனால் மகேஷ் அவன் திட்டியதையும் பொருட்படுத்தாமல் காலில் விழுகாத குறையாக கெஞ்சினான். அகிலா கஷ்டப்படுவதைப் பார்க்க முடியவில்லை. அவளை ஏமாற்றி விடாதே என்றான். அவள் கஷ்டப்பட்டா உனக்கு என்னடா அக்கறை வந்தது அவள்மேல். நீ யாருடா அவளுக்கு என்று அனாகரிமாக திட்டினான்.

அவன் அதற்குப் பிறகு மகேஷிடம் பேசாமல் போனை துண்டித்தான்.

மகேஷீம் அகிலாவை தற்கொலை முயற்சிக்கு போகவிடாமல் அவளை சமாதனப்படுத்திக் கொண்டிருந்தான்.

நாட்கள் போகப் போக அகிலாமேல் மகேஷீக்கு ஒரு விதமான ஈர்ப்பு வரத் தொடங்கியது. அவன் அவள்மேல் அளவுகடந்த பிரியம் வைக்க ஆரம்பித்து விட்டான்.

அவள் ஒருநாள் போனில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது எனக்கு ரவாலட்டு சாப்பிடனும் போல் தோனுகிறது என்று சொல்லியதும் அப்பொழுதே அவனின் நண்பனின் வண்டியை எடுத்துக் கொண்டு அவளுக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். அப்பொழுது மணி இரவு 12:15 இருக்கும்.

அவனுக்கு முதல் காதலின் இன்பமும் வலியும் அகிலாவிடமே கிடைக்கிறது.

அவள் பிடித்ததை வாங்கிக் கொடுத்ததில் மகேஷீற்கு எல்லையில்லா ஆனந்தமாக இருந்தது.

மகேஷ் அகிலாவை ஒருதலையாக காதலித்துக் கொண்டிந்தான். அவன் வெண்ணிலாவை மறந்து விட்டான்.

அகிலா அவ்வளவு அழகாக இருக்க மாட்டாள். இருந்தாலும் வெண்ணிலா மேல் இல்லாத பாசம் அவனுக்கு அகிலாமேல் வந்தது.

ஒருநாள் அகிலா ஏதோ சண்டை போட்டுக் கொண்டு மகேஷிடம் பேசாமல் இருந்தால் அவளின் குரலைக் கேட்க முடியாததால் பைத்தியம் புடித்தவன் போல குடித்துவிட்டு நடுரோட்டில் விழுந்து கிடந்தான்.

அவனின் நண்பன் மகேஷிடம் உனக்காக வெண்ணிலா இருக்கும் பொழுது நீ ஏன் மற்ற பெண் பேசவில்லை என்று புலம்புகிறாய்...

வெண்ணிலாவின் நிலைமையை யோசித்துப் பார். நீ இப்படி வேறு பெண் பேசவில்லை என்பதால் ரோட்டில் குடித்துவிட்டு கிடப்பதை கேள்விப்பட்டால் அவளின் மனம் என்ன பாடுபடும் அவளை நினைத்துப்பார் என்றான் அவனின் நண்பன்.

அவன் நண்பன் சொல்வதெல்லாம் அவனின் காதுக்கு ஏறவில்லை. அவன் அகிலாவின் பேரையே முனங்கிக் கொண்டு இருந்தான்.

அவனுக்கு காதல் முற்றத் தொடங்கியது அவள் இல்லாமல் அவனால் வாழ முடியாது என்ற அளவுக்கு காதலிக்க தொடங்கி விட்டான்.

அந்தக் காதலைக் கூட அகிலாவிடம் சொல்லாமல் இருந்தான். நாட்கள் போக போக தன் காதலை அவளிடம் சொல்லியபோது அவள் நீ நல்ல நிலைக்கு வந்த பிறகு எங்கள் வீட்டில் வந்து பெண்கேள் திருமணம் செய்து கொள்ளலாம் என்றாள். இப்பொழுது நாம் ஒருத்தரை ஒருத்தர் நன்றாக புரிந்து கொள்ளலாம் என்றாள்.

இவளின் வார்த்தையைக் கேட்டவுடன் மகேஷ் சந்தோஷத்தில் அப்படியே காற்றில் மிதந்து கொண்டிருந்தான்.

அவளுக்குத் தெரியாது வெண்ணிலாவும் மகேஷும் காதலித்தது.

ஒருநாள் வெண்ணிலா கால் பண்ணி எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறார்கள் மாமா நீங்கள் வந்து எங்கள் வீட்டில் பேசுங்கள் என்றாள்.

அதற்கு மகேஷ் உன் வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளையை கட்டிக் கொள் என்னை தொந்தரவு செய்யாதே என்று சொல்லி விட்டு போனை கட் பண்ணி விட்டான்.

வெண்ணிலா தொடர்ந்து 80 தடவை கால் பண்ணிக் கொண்டே இருந்தால் இவன் போனை சைலன்டில் போட்டு விட்டு தூங்கி விட்டான்.

அகிலாவிற்கு நிறைய ஆண் நண்பர்கள் இருந்தார்கள். அவள் வேலை செய்யும் இடத்தில் உள்ள ஆண்களிடமும் பேசுவாள்.

மகேஷிற்கு சுத்தமாக பிடிக்கவில்லை அவள் ஆண்களிடம் பேசுவது. அகிலா அவர்களிடம் நான் நட்பாகத்தான் பேசுகிறேன் என்பாள்.

இதனால இருவருக்கும் அடிக்கடி சண்டை வந்து கொண்டிருந்தது.

ஒருநாள் அகிலா தன்னுடன் வேலை பார்க்கும் நண்பரின் பைக்கில் சென்றுள்ளார். மகேஷ் கேட்டபொழுது பஸ் வரவில்லை அதுனாலதான் வந்தேன் என்று சொன்னாள்.

பின்பு அவன் அகிலா வேலை செய்யும் இடத்தில் உள்ள நபர்களிடம் விசாரித்தான் அங்கு அவர்கள் அனைவரும் இங்கே வேலை செய்யும் ஒருவனை காதலிக்கிறாள் என்றனர்.

அவனால் நம்பவும் முடியவில்லை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை குழப்பத்துடன் வீட்டிற்கு வந்தான்.

மாலை வேளையில் டீ குடிப்பதற்க்காக ஒரு ரெஸ்டாரெண்டிற்கு மகேஷும் அவனின் நண்பனும் சென்றனர்.

அங்கு அகிலா ஒரு பையனுக்கு பப்ஜை எடுத்து ஊட்டிக் கொண்டிருந்தால் இதைப் பார்த்ததும் மகேஷ் அருகில் இருந்த கம்பியை எடுத்துக் கொண்டு அவள் தலையில் ஓங்கி அடித்தான்.

அந்த இடத்திலே சுருண்டு விழுந்தால் அவளின் உயிரும் மெல்ல மெல்ல பிரிந்தது.

மகேஷை போலீஸ் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சென்றனர். அவன் ஜீப்பில் சென்று கொண்டிருக்கும் பொழுது தான் அவனுக்கு எல்லாம் புரிந்தது நான் இருப்பதை விட்டு விட்டு பறப்பதற்கு ஆசைப்பட்டு விட்டோம்.

என்னையே உயிராய் நினைத்த வெண்ணிலாவுக்கு நான் செய்த துரோகம் தான் இன்று அகிலா எனக்கு செய்தாள்.

உண்மையான பாசம் பக்கத்தில் இருக்கும் பொழுது தெரியாது அது இல்லாமல் போனால் தான் அதன் அருமை தெரியும்.

**அனைவரும் தன் மனைவியிடமோ கணவனிடமோ உண்மையாக இருங்கள் இடையில் வரும் அன்பு இடையிலே சென்று விடும்.**

**ஆரூரன்**

2ஆம் பக்க தொடர்ச்சி...

குறிப்பாக த.தே.கூட்டமைப்பு இல்லாமலாக்கப்படுகின்ற பொழுது அது தமிழீழ விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்டது என்ற சொற்பதமும் இல்லாமல் ஆக்கப்படும். அதனையே அரசாங்கமும் விரும்புகின்றது. அதன் பின்னர் அரசாங்கம் சார்ந்த கட்சிகளில் பிரதிநிதித்துவங்களை எடுத்துக்கொண்டு செயற்படுகின்ற ஒரு செயற்பாடுகளையே அரசாங்கமும் எதிர்பார்க்கின்றது. அவ்வாறு நிலைமை தோற்றுவிக்கப்படுமாக இருந்தால் ஆளுங்கட்சிக்கோ அல்லது எதிர்க்கட்சிக்கோ வாக்களிக்கும் சூழல் உருவாகும். குறித்த இவ் இருகட்சிகளுமே சிங்கள பெரும்பான்மையை கொண்டிருக்கும் கட்சிகளாக அமையும். ஆரம்பத்தில் தமிழினத்துக்காக உருவாகிய கட்சிகளாக தமிழர் விடுதலை கூட்டணி, தமிழ் காங்கிரஸ் போன்றவை இருந்தாலும் கூட தொடர்ந்தும் தமிழ் மக்கள் மனதில் இடம்பிடிக்க முடியாத ஒரு சூழல் உருவாக்கபட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினாலும் மறைந்த ஊடகவியலாளர் சிவராம் அவர்களினாலும் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பு பலத்த சவால்களுக்கு மத்தியிலும் தமது அரசியல் செயற்பாடுகளை நகர்ந்தி வந்தது. தமிழ் தேசியத்திற்காக குரல் கொடுத்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலரும் அரச தரப்பினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். தமிழ் தேசிய கூட்டமைப்பை எவ்வாறாயினும் இல்லாமல் செய்வதற்கு கருணா, பிள்ளையான் போன்றவர்களும் களமிறக்கப்பட்டனர். தொடர்ந்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடுபவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அரச கைக்கூலிகளாக செயற்படுகின்ற அரசியல் தரப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு மீண்டும் பிரகாசிப்பதை விரும்பவில்லை. அதனையே தற்பொழுது ரெலோ கட்சியும் கையில் எடுத்துள்ளது. தற்பொழுது தான் ரெலோ கட்சியில் இருப்பவர்களுக்கு ஞானம் பிறந்துள்ளதாக தெரிகின்றது. த.தே.கூட்டமைப்பை சிதைவடைய செய்வார்களாக இருந்தால் தமிழ் மக்களின் அனைத்து வளங்களும் நிலங்களும் சுரண்டப்படும் ஒரு சூழல் உருவாகும். ஒற்றுமையே பலம் என்றும் உணர்ந்தும் ஒற்றுமையற்றவர்களாக செயற்படுகின்ற சூழலையே பயணித்து வந்த ரெலோவும் தனது வஞ்சகத்தை தற்பொழுது விதைத்துள்ளது. ஒரு வேளை எதிர்வரும் தேர்தலில் கூட்டமைப்பாக தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் போட்டியிடுவதற்கான திட்டங்களும் இருக்கலாம். ஆனால் இதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒத்துவருமா என்பது ஒரு கேள்வி.

தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை இல்லாது ஒழிப்பதற்கு தற்பொழுது அரச தரப்பு ரெலோவின் ஊடாக தமது காய் நகர்த்தல்களை நகர்த்த தொடங்கியுள்ளது. இதற்கு மக்கள் தகுந்த பாடத்தை புகட்டுவார்கள் என்பதே வரலாறு நமக்கு தந்த பாடம். **கடந்த காலங்களில் கொலை,கொள்ளை,கற்பழிப்பு,ஆள்கடத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த ரெலோ TNA கட்சிக்குள் இருந்து கொண்டு விபச்சார வீடு என கூறுவது நியாயமானதா? என்பதை அவர்களே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.**

## உத்வேகமூட்டும் விவேகானந்தர் பொன்மொழிகள்
## (Inspirational Vivekananda quotes)

**1. அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.**

**2.எல்லாப் பெருமையையும், எல்லா ஆற்றலையும், எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர, ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை.**

**3. ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடிய போதிலும் சரி, அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி, உன்னுள்ளே இருக்கும் ஆன்மிகம் விழிப்படையாவிட்டால், அதனால் ஒரு பயனும் இல்லை.**

**4. மக்களுக்கு சேவை செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு நாத்திகனுக்கு தருமசிந்தனை இருக்கலாம். ஆனால் மதகோட்பாடு இருக்க இயலாது. மதத்தில் நம்பிக்கை வைத்தவனுக்கு தருமசிந்தை அவசியம் இருக்க வேண்டும்.**

**5. கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான். காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.**

**6. நமக்குப் பல அனுபவங்களை பெற்றுத்தர இந்த உலகம் படைக்கப்பட்டது. இங்கிருக்கும் ஒவ்வொரு பொருளும் நம்மால் அனுபவிக்கப் பட வேண்டியது என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அது வேண்டும், இது வேண்டும் என யாரிடமும் கேட்காதே. வேண்டுதல் ஒரு பலவீனமாகும். இந்த வேண்டுதல்தான் நம்மை பிச்சைக்காரர்களாக்குகிறது. நாம் அனைவரும் ராஜகுமாரர்கள். பிச்சைக்காரர்கள் அல்ல.**


**7. கோபத்தில் ஒருவரை ஒரு அடி அடித்துவிடுவது எளிது. ஆனால் எழும் கையை தாழ்த்தி மனதைக் கட்டுப்படுத்தி அமைதியாய் இருப்பது கடினமான செயல்.இந்த கடினமான செயலைத்தான் நீ பழகிக்கொள்ள வேண்டும்.**

**8. ஏதாவது தவறு செய்துவிட்டால், ஐயோ! நான் தீயவன் ஆகிவிட்டேனே!" என்று வருத்தப்பட வேண்டாம். நீ நல்லவன்தான். ஆனால், இன்னும் உன்னை நல்லவனாக்க முயற்சி செய்ய வேண்டும்.**

**9. மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சமபங்கு வகிக்கின்றன. சில நேரங்களில் இன்பத்தை விட துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது. நன்மையைப் போல் தீமையில் இருந்தும் மனிதன் பாடம் கற்றுக்கொள்கிறான்.**



## நகைச்சுவை துணுக்குகள்



**உங்க கிட்னி பெயில் ஆகிடுச்சு.
நான் என் கிட்னிய படிக்க வைக்கவே இல்லயே டாக்டர்
அது எப்படி பெயில் ஆகும்.**

**டாக்டரும் , பேஷன்ட்டும்
ஒருத்தரை ஒருத்தர் கட்டிப்
பிடிச்சுக்கிட்டு அழுகுறாங்களே ஏன் ?
ரெண்டு பேருக்கும் இதுதான் முதல்
ஆபரேஷனாம் !.**

**ஊசி போட
நர்ஸ் வேணும்,
காசு போட
பர்ஸ் வேணும்,
காபி போட
சுகர் வேணும்,
கடலை போட
ஃபிகர் வேணும்,**

**கொக்கரக்கோ கும்மாங்கோ!**

**"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து
வேலை செஞ்சேன்"**

**"அவ்வளவு பிசி ஒர்க்கா?"**

**"இல்ல் சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும்
எழுப்பிவிடலை"**

**என்னதான் உங்க வீட்டு டிவி விடிய விடிய
ஓடினாலும் அதால ஒரு இஞ்சு கூட நகரமுடியாது.**

**உன் கணவரை எதுக்கு எடக்கு மடக்கா திட்டினே ?
நான் போன் பண்ணினா நாய் குரைக்கிற மாதிரி
செல்போன்ல ரிங்டோன் செட் பண்ணி வெச்சிருக்கார்
அதுதான் .**

**செல்போனுக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?
மனிதனுக்கு கால் இல்லன்னா பேலன்ஸ் பண்ண
முடியாது.செல்போனில் பேலன்ஸ் இல்லன்னா கால்
பண்ண முடியாது.**

**நான் நல்லவன்னு சொல்லி ஊரை ஏமாத்த நான்
ஒன்னும் கெட்டவன் இல்ல...**

**நான் கெட்டவன்னு உண்மையை ஒத்துக்க நான் ஒன்னும்
நல்லவன் இல்ல...**

**.....நான் அவன் இல்லை....**

**"நேற்று பெண் பார்க்கப் போன இடத்துல மயங்கி
விழுந்துட்டேன்டா...!"**

**"பெண் அவ்வளவு அழகா?" "இல்லடா... விஷயம் தெரிஞ்சு
என் மனைவியும் அங்கே வந்துட்டா...!"**

5ஆம் பக்க தொடர்ச்சி...

நாட்டில் வேறு ஏதேனும் பகுதிகளில் இவ்வாறு நடைபெறுகின்றதா ஏன் வடக்கில் மட்டும் இந்த நிலை என்று சொல்லி பல்வேறு முக்கியமான கேள்விகளை எழுப்பியிருந்தார். எனவே தமிழ் கட்சிகளின் எதிர்ப்புக்கள் தற்பொழுது பதிவாகியிருக்கின்றன வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக.


அத்துடன் பொருளாதார நிபுணர்கள் மற்றும் எதிர் தரப்பினரின் விமர்சனத்துக்கு உள்ளாகி இருப்பது இந்த வரவு செலவுத் திட்டத்தினூடாக தற்போது பாதிக்கப்பட்ட இருக்கின்ற மற்றும் பொருளாதார ரீதியாக கடுமையான சவால்களை எதிர்நோக்கியிருக்கின்ற மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் இதில் முன்வைக்கப்படவில்லை என்பதாகும். எனவே இது குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும். காரணம் தற்போதைய நிலைமையில் நாடு நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை நோக்கி பயணிப்பது மட்டுமன்றி உடனடியாக பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கான மீட்சித் திட்டங்களும் அவசியமாகின்றன. அந்தவகையில் இந்த குறைபாட்டை அடுத்து வரும் காலங்களில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நெருக்கடியான காலகட்டத்தில் தற்போது இந்த வரவு செலவுத் திட்டம் முன் வைக்கப்பட்டிருக்கும் நிலையில் நீண்டகால பொருளாதாரத் திட்டங்களை தவிர்க்க முடியாது. அதற்கான பொருளாதார கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். ஆனால் அதேநேரம் தற்போது உடனடியாக பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கான நிவாரண உதவிகள் உறுதிப்படுத்தப்படுவதும் அவசியமாகும்.

இந்நிலையில் வரவு செலவுத்திட்டம் விவாதிக்கப்பட்டுவருகின்றது. டிசம்பர் மாதம் நடுப்பகுதிவரை விவாதம் நடைபெறும் நிலையில் அந்த விவாதங்களின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற விடயங்களை ஆராய்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். வாழ்க்கை செலவு உயர்வினால் நசுங்கிப் போயிருக்கும் மக்களுக்கான நிவாரணத் திட்டங்கள் உள்ளடக்கப்பட வேண்டியதும் அவசியமாக இருக்கின்றது. நீண்டகால மற்றும் குறுகியகால திட்டங்கள் என்பன சமாந்தரமாக பயணிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.



# பல்சுவை கதம்பம்



## ரோஸ்வாட்டர் மட்டும் போதும்... க்ளன்சர், டோனர், மாய்ச்சரைஸராக எப்படி பயன்படுத்தலாம்

### க்ளன்சராக

ரோஸ் வாட்டர் மிகச்சிறந்த க்ளன்சராகச் செயல்படுகிறது.முகத்தைத் தூய்மையாக்கி. சருமத் துளைகளுக்குள் அடைந்திருக்கும் மாசுக்களை வெளியேற்றி சருமத்தைத் தூய்மைப்படுத்துவதில் ரோஸ் வாட்டர் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது.ரோஸ் வாட்டரை ஒரு ஸ்பிரே பாட்டிலில் ஊற்றிக் கொள்ள வேண்டும். அதை முகத்தில் நன்கு ஸ்பிரே செய்து கொண்டு, அப்படியே வைத்திருக்க வேண்டும். அது ஓரிரு நிமிடங்களில் உலர்ந்துவிடும்.

மீண்டும் ஒருமுறை இதேபோன்று ஸ்பிரே செய்து 2 நிமிடம் கைகளால் வட்ட வடிவில் மசாஜ் செய்து விட வேண்டும்.பின்பு ஈரமான காட்டனோ அல்லது டிஸ்யூவோ கொண்டு துடைத்து விட வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு இரண்டு முறை முகம் மற்றும் கழுத்துப் பகுதியைச் சுத்தம் செய்தால் சருமம் புத்துணர்ச்சியோடு இருக்கும்.

### ஆயில் ஸ்கின் உள்ளவர்கள்

ஆயில் ஸ்கின் உள்ளவர்கள் அதிகப்படியான எண்ணெயை முகத்தில் இருந்து நீக்க, சருமத்தை அடிக்கடி துடைக்கவோ கழுவவோ வேண்டியிருக்கும். அதற்கும் இந்த ரோஸ்வாட்டர் உதவியாக இருக்கும்.

ரோஸ் வாட்டருடன் 2 துண்டு கற்பூரத்தைச் சேர்த்து நன்கு கலந்து ஒரு பாட்டிலில் வைத்துக் கொண்டு, அவ்வப்போது காட்டனில் தொட்டு முகத்தைத் துடைத்தால் முகத்திலுள்ள அதிகப்படியான எண்ணெய் குறையும்.

### பேஸ் பேக்

நீங்கள் என்ன வகை நேச்சுரல் பேஸ்பேக் பயன்படுத்தினாலும் அதனுடன் ரோஸ் வாட்டரை சேர்த்துக் கொள்ளுங்கள்.அது வழக்கமாக உங்களுக்குக் கிடைக்கும் ரிசல்ட்டை விட நல்ல பலன்களைக் கொடுக்கும்.குறிப்பாக, ரோஜா இதழ் பொடி, பயத்த மாவு மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து குழைத்து, அதை முகத்தில் தடவி 20 நிமிடங்கள் கழித்து முகத்தை நார்மல் வாட்டரில் கழுவ வேண்டும்.

### நீராவி பிடித்தல்

நீராவி பிடிக்கும் போது சருமத் துளைகள் திறந்து கொண்டு, சருமத்திலுள்ள அழுக்குகள் வெளியேறும்.

அதோடு முகத்தின் நிறமும் மேம்பட வேண்டும், புத்துணர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் நீராவி பிடிக்க வைத்திருக்கும் வெந்நீரில் ரோஸ் வாட்டரை 2 ஸ்பூன் சேர்த்து ஆவி பிடியுங்கள்.



### மாய்ச்சரைஸராக

ரோஸ் வாட்டரை மாய்ச்சரைஸராகவும் பயன்படுத்த முடியும்.ஒரு ஸ்பூன் கிளிசரினுடன் இரண்டு ஸ்பூன் ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து, இந்த கலவையை மாய்ச்சரைஸராகப் பயன்படுத்தலாம்.இதை தினமும் குளிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக செய்வது இன்னும் கூடுதல் பலன்களைத் தரும்.

இந்த மாய்ச்சரைஸர் சருமத்தை மென்மையாகவும் நீரேற்றத்துடனும் வைத்திருப்பதோடு, சருமத்தில் உள்ள பிக்மண்ட்டேஷன், கருந்திட்டுக்கள் ஆகியவற்றையும் போக்கக் கூடியது.

### டோனராக

சருமத்துக்கு டோனர் என தனியே எதுவும் பயன்படுத்தத் தேவையில்லை. ரோஸ் வாட்டர் மிகச்சிறந்த டோனிங் ஏஜண்டாகச் செயல்படும்.ஒரு பௌலில் சிறிதளவு லெமன் ஜூஸ் எடுத்துக் கொண்டு, அதனுடன் சிறிது ரோஸ் வாட்டர் சேர்த்து இரண்டையும் நன்கு கலந்து கொள்ள வேண்டும்.

இந்த கலவையை இரவு தூங்கச் செல்லும்முன் ஒரு காட்டனில் நனைத்து நன்கு முகத்தில் அப்ளை செய்து இரவு முழுவதும் அப்படியே வைத்திருங்கள். காலையில் எழுந்ததும் முகத்தை குளிர்ந்த நீரில் கழுவிவிட்டு பாருங்கள். முகம் ஜொலிக்கும்.

## வீட்டில் ஜிலேபி செய்வது எப்படி?


குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் ஜிலேபி மிகவும் பிடிக்கும். இன்று வீட்டிலேயே எளிய முறையில் ஜிலேபி செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

**தேவையான பொருட்கள் :**
**உளுத்தம் பருப்பு – 250 கிராம்**
**அரிசி – 30 கிராம்**
**சர்க்கரை – 1 கிலோ**
**லெமன் கலர்பவுடர், ரோஸ் எசன்ஸ்**
**டால்டா, நெய், அல்லது ரீபைண்ட் ஆயில்**

செய்முறை : அகலமான பாத்திரத்தில் சீனியை போட்டு, தண்ணீர் ஊற்றி, எசன்ஸ், கலர் சேர்த்து (தண்ணீரில் சர்க்கரை மூழ்கும் வரை) அடுப்பில் வைக்கவும். சீனிபாகு கம்பி பதம் வந்தவுடன் பாகு ஆறாமல் இருக்கும் விதத்தில் அடுப்பில் மிதமான தணலில் வைக்கவும். அதே நேரம் உளுத்தம் பருப்பையும் அரிசியையும் சேர்த்து ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். இரண்டும் நன்றாக ஊறியதும் மிருதுவாக அரைத்துக் கொள்ளவும்..

வாணலியில் டால்டா அல்லது நெய் ஊற்றி காய்ந்ததும் ஒரு கரண்டி மாவை எடுத்து ஜாங்கிரி பிழியும் ரெட்டில் வைத்து கையால் அழுத்தி எண்ணெயில் சுற்றவும். நன்றாக சிவக்க வெந்ததும் எடுத்து சீனிப்பாகில் போடவும். ஒரு தடவைக்கு 4.5. ஜிலேபி போட்டு எடுக்கவும்.

சுவையான இனிப்பான ஜிலேபி ரெடி. ஜாங்கிரி பிழியும் ரெட்டில் இல்லாதவர்கள் கனமான கைக்குட்டை போன்ற துணியால் சுண்டு விரல் நுழையக் கூடிய அளவு ஒரு சின்ன ஓட்டைப் போட்டு அதில் ஒரு கைப்பிடி மாவை எடுத்து வைத்து கை முறுக்கு பிழிவது போன்றும் பிழியலாம்.



## பெண்களின் ஆரோக்கியத்திற்கு உதவும் அட்டகாசமான எளிய மருத்துவ குறிப்புகள்

1. முட்டைகோஸில் ஈஸ்ட்ரோஜன் அதிகமென்பதால் பெண்களுக்கு மார்பக புற்று வரமல் தடுக்க கோதுமை உணவுடன் கோஸ் சேர்த்து உண்ணலாம்.

2. பெண்களுக்கு மார்பக புற்று உள்ளிட்ட பல்வேறு புற்று நோய்கள் வராமல் தடுக்க ஆப்பிள் உதவுகிறது.

3.மாதவிடாய்க் கால மன அழுத்தம், பயம், பதற்றம் ஆகியவற்றால் தொந்தரவா? அந்த நாட்களில் கார்ன்ஃபிளாக்ஸை காலை உணவாக்குங்கள்.

4. கர்ப்பிணிகள், நாவல்பழம் சாப்பிட்டால் வயிற்றில் உள்ள குழந்தை கறுப்பாகப் பிறக்கும் என்பதும், குங்குமப்பூ சாப்பிட்டால் சிவப்பாகப் பிறக்கும் என்பதும் மூட நம்பிக்கையே. தோலின் நிறத்தை நிர்ணயிப்பவை 'மெலனின்' எனப்படும் நிறமிகளே!



5. கர்ப்பிணிகள், இரும்புச்சத்து மாத்திரை சாப்பிட்டால், உடல் லேசாக கறுத்து, பிறகு பழைய நிறத்துக்கு வந்துவிடும். இதை வைத்தே, குழந்தையும் கறுப்பாக பிறக்கும் என்று சிலர் பயப்படுவார்கள். அது தேவையற்றது.

6. கர்ப்பிணி பெண்கள், காலையில் சீக்கிரம் சாப்பிட வேண்டும். இதனால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையாமலிருக்கும். அடிக்கடி மயக்கமும் வராது.

7. வயிற்றில் குழந்தை வளர வளர, குடல் ஒரு பக்கம் தள்ளும். அப்போது அதிகமாக சாப்பிட முடியாது. சீக்கிரமும் பசிக்காது. அந்த நேரங்களில் ஜூஸ், முளைகட்டிய தானியங்கள் போன்றவற்றை, பல வேளைகளாகப் பிரித்துச் சாப்பிட வேண்டும்.

8. பிரசவ காலத்துக்குப் பின் வயிற்று தசைகள் வலுப்பெற உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும்.

9. கர்ப்பிணிகளின் உடலுக்கு இயற்கையான குளிர்ச்சியைத் தருகிறது வாழைப்பழம். உடல் காரணங்களால் மட்டுமல்ல... உணர்ச்சி வசப்படுவதாலும் உடலைப் பாதிக்கும் சூட்டை வாழைப்பழம் நீக்குகிறது. தாய்லாந்தில் தாயாகப் போகிறவரின் தினசரி உணவில் வாழை ரெசிபிக்கள் விதவிதமாக இருக்கும்.

10. கர்ப்பக் காலத்தில் சிலருக்கு கால்கள் வீங்குவது வழக்கமான ஒன்று. அதிகமாக தண்ணீர் குடிப்பதால்தான் இப்படி என்று சொல்வது தவறு.

# வடகிழக்கிற்கான நிரந்தர தீர்வுக்கு தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றிணைவதே இன்றைய காலத்தின் அவசியம்

சமகால அரசியல் பார்வையிலே இலங்கையினுடைய அரசியல் என்பது ஒரு மோசமான நிலையை அடைந்திருக்கின்றது. அதுமட்டுமன்றி தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டம் என்கின்றபொழுது கொரோனா வைரஸை தொடர்ந்து பொருளாதார பிரச்சனையை தொடர்ந்து இன்று இந்த அரசாங்கம் ஒரு நிலையற்ற அரசாங்கமாக தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றது. அதுமட்டுன்றி பயங்கரவாத தடைச்சட்டம் என்பது நீக்கப்பட்டால் மட்டுமே இலங்கையில் ஒரு சுபீட்சமான ஒரு பொருளாதார வருகிறது. இந்த பேச்சுவார்த்தையில் சாதகமான முடிவு எட்டப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சீர்திருத்தங்கள் தேவைப்படுகிறது. அடுத்த ஆண்டிற்குள் நாட்டின் பொருளாதாரம் சீராகும்' என்று தெரிவித்தார்.

இங்கே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினுடைய தலைமையில் அல்லது கோட்டபாய ராஜபக்ச அல்லது மகிந்த ராஜபக்ச அல்லது பசில் ராஜபக்ச போன்றோரின் தலைமையில் அரசியலையே அவர்கள் முன்னெடுத்து சென்றிருக்கின்றார்கள், சென்று கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே இதிலே ஒரு மாற்றம் வேண்டும் அந்த மாற்றம் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும். அந்த மாற்றத்திற்கான செயல்திட்டம் என்ன என்னும் பொழுது அந்த மாற்றத்தை நாம் கொண்டுவரமுடியும் என்று நிச்சயமாக பார்க்க வேண்டும். தமிழ் கட்சிகளின் ஒற்றுமை என்பது அல்லது ஒருங்கிணைவு என்பது இக்காலகட்டத்தில் அவசியமாக இருக்கின்றது.

பெற்றுக்கொள்ள முடியும் என்பது தான் இன்றைய நிலைப்பாடாகவும் இருக்கின்றது.

ஆகவே அரசாங்கங்கள் தங்களை மாற்றிக்கொள்வதற்காக மாறுபட்ட கருத்துக்களை தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றார்கள். இவர்களுடைய குழப்பத்திலே தமிழ் மக்களும் பலிகேடா? கடத்தப் பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம் தொடர்ந்தும் நிலுவையிலே இருக்கின்றது அந்த விடயங்கள் தொடர்பாகவும் பார்க்க வேண்டும். இன்று 2000 நாட்களையும் கடந்து




ரீதியில் அதுமட்டுமல்லாது வர்த்தகர்கள் அதாவது முதலீட்டாளர்கள் கூடுதலாக இலங்கைக்கு வரக்கூடிய சூழ்நிலை இருக்கும் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை.

'இலங்கையின் பொருளாதாரம் அடுத்த ஆண்டு முடிவிற்குள் சீராகும்' என வரவு செலவு திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கே நம்பிக்கை தெரிவித்துள்ளார். இலங்கையில் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் வீதியில் இறங்கி போராடியதால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இன்னமும் வெளிநாட்டு கடன் உதவியை இலங்கை நம்பி உள்ள நிலையில், வரும் 2023ம் ஆண்டிற்கான பட்ஜெட்டை, நிதி அமைச்சர் பொறுப்பை வகிக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். பட்ஜெட்டில், டிஜிட்டலை மையப்படுத்திய பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பொருட்களின் விலையை குறைப்பது உள்ளிட்ட கவர்ச்சிகர திட்டங்கள் எதுவும் இடம் பெறவில்லை.

அந்நிய முதலீட்டை ஈர்ப்பது, ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பான அம்சங்களும், உலக மற்றும் ஆசிய நாடுகளுடனான வர்த்தக உறவை மீண்டும் வலுப்படுத்துவது குறித்தும் பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் தனது பட்ஜெட் உரையில், "சர்வதேச நாணய நிதியத்தால் கேட்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்பாட்டை எட்டுவதற்கு, சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட கடனாளிகளுடன் இலங்கை அரசு பேசி

தான் இந்த இலங்கையின் அரசியல் சென்று கொண்டிருக்கின்றது என்ற கேள்விக்குறியும் தற்பொழுது எழுந்துள்ளது. காரணம் என்னவென்றால் ரணில் விக்ரமசிங்கவை பொறுத்தவரையிலே மகிந்த குடும்பத்தின் ஒரு செல்லப்பிள்ளையாக அவர் தற்பொழுது தனது அரசியலை முன்னெடுத்துக்கொண்டு வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆகவே இன்றைய காலகட்டங்களை எடுத்துக்கொண்டால் வடக்கு கிழக்கு அரசியல் மிக மோசமான நிலையை அடைந்திருக்கின்றது. தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் தமிழ் மக்களினுடைய நிலங்கள் சுரண்டப்படுகின்ற ஒரு நிலைமை காணப்படுகின்றது, இது முற்றாக மாற்றம் பெறவேண்டும். எனவே எந்த சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களுக்கான ஒரு விடுதலை அரசியலை வென்று கொடுப்பதிலே தமிழ் மக்களும் அரசியல் தலைவர்களும் சளிக்காது செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே கட்சிகளிடையே குழப்பங்களை உருவாக்கி தென்னிலங்கையிலும் பிரச்சனைகளை உருவாக்கி மலையக அரசியல், வடக்கு அரசியல், கிழக்கு அரசியல் என்று அதனை கூறுபோடுகின்ற ஒரு நடவடிக்கையாகவே இந்த அரசாங்கம் இதனை செய்து வருகின்றது.

எனவே நாம் ஒவ்வொரு காலகட்டத்திலும் எடுத்துக்கொண்டால் அதாவது குறிப்பாக டட்லி சேனநாயக்கவிலிருந்து தற்பொழுது இருக்கக்கூடிய ரணில் விக்ரமசிங்க வரையிலான ஆட்சியாளர்களினுடைய ஆட்சி கட்டமைப்பை எடுத்துக்கொண்டாலும் கூட இனவாத

தென்னிலங்கையிலே அரசியல் தலைமைகள் ஒரு குழப்பகரமான சூழ்நிலையில் ஜே.வி.பி ஆனது தொடர்ந்தும் குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு அவர்கள் ஆட்சியை கைப்பற்றிவிட முடியும் ஆட்சியை தாம் கொண்டு வர முடியும் என்று எத்தணித்துக் கொண்டிருக்கின்றார்கள். சிறுபான்மை கட்சியாக இருக்கின்ற அந்த ஜே.வி. பி கட்சியினர் தென்னிலங்கையிலே அரசாங்கத்திற்கு பாரியதொரு சவாலாக அவர்கள் தற்பொழுது திகழ்கின்றார்கள். இருந்தும் அவர்களுடைய பக்கத்தில் ஆசனம் இல்லாத காரணத்தினால் தற்பொழுது ரணில் விக்ரமசிங்கவினுடைய கை ஓங்கியிருக்கின்றது. ரணில் விக்ரமசிங்கவை பொறுத்தவரையிலே குறிப்பாக ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே இராஜதந்திர அரசியல் நகர்வை நகர்த்துவதற்கான முன்னெடுப்புக்களையே அவர்கள் இக்காலகட்டத்தில் மேற்கொண்டிருக்கின்றார்.

குறிப்பாக அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகளினுடைய ஒத்துழைப்புக்கள் இவரிற்கு கூடுதலாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி இந்த நாடுகளுடன் அவர் குறிப்பாக இரகசிய ஒப்பந்தங்களையும் செய்து கொண்டு அதற்கான முன்னெடுப்புக்களையும் முன்னெடுத்து வருகின்றார்.

தற்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பானது இக்காலகட்டத்திலே வடகிழக்கு மலையகம் சார்ந்த அரசியல் கட்சிகளும் எவ்வாறு இந்த அரசியலை முன்னெடுக்க வேண்டும் அல்லது தொடர்ந்தும் இந்த அகிம்சை வழியிலான போராட்டங்களை முன்னெடுத்து செல்வதன் ஊடாகவே எமக்கான ஒரு தீர்வு திட்டத்தை

இந்த போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா இல்லையா என்றும் கூட தெரியாத ஒரு சூழல் காணப்படுகின்றது.

அதற்கும் தீர்வுதிட்டத்தை வழங்கி ஒரு முற்றுப்புள்ளியை இந்த அரசாங்கம் வைக்க வேண்டும். தற்போதைய குழப்பமான சூழ்நிலையிலே வடகிழக்கு அரசியல் என்பது ஒரு பின்தங்கி போகின்ற நிலைமையே தற்பொழுது காணப்படுகின்றது.பின்தங்கிப்போகின்ற இந்த நிலைமையை தொடர்ந்தும் நாம் அங்கீகரிப்போமாக இருந்தால் தமிழ் மக்களினுடைய பிரச்சனைகள் என்றுமே தீர்க்கப்படாத பிரச்சனைகளாகவே மாற்றம்பெறவிருக்கின்றது.

எனவே இந்த இலங்கை தீவிலே மூவின மக்களும் வாழ்கின்றார்கள் மூவின மக்களுக்குமான ஒரு சமநிலையை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும். வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் என்பது இன்று நேற்றல்ல அது பூர்வீக காலங்களாக இருந்து வந்தது. அதனை அத்துமீறி அரசாங்கம் ஒரு இனத்தை அழிக்கின்ற செயற்பாட்டை மேற்கொண்டது இனப்படுகொலையின் உச்சமாகவே இதனை பார்க்க முடிகின்றது.

எதிர்வரும் காலங்களில் இந்த அரசாங்கங்களுக்கு நாம் பாடங்களை படிப்பிக்கின்ற அல்லது இந்த அரசாங்கத்தினுடைய நடைமுறைகளை கையாளுகின்ற விதங்களை மாற்றியமைக்கக்கூடிய நடைமுறைகளை கொண்டுவர வேண்டியது அவசியமாகின்றது.

**இரணியன்**



# விளையாட்டு செய்திகள்



2022 உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் உலகக் கிண்ணத்தை வரவேற்று களைகட்டியுள்ள கட்டாரின் டோஹா நகர்















## 3 ஆவது எல்.பி.எல். அத்தியாயத்தை முன்னரைவிட சிறப்பாக நடத்த ஸ்ரீ லங்கா கிரிக்கெட் ஏற்பாடு

தேசத்திற்கும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கும் பல்வேறு நன்மைகளையும் இலாபங்களையும் ஈட்டிக்கொடுத்த வெற்றிகரமான முதலிரண்டு லங்கா பிறீமியர் லீக் இருபது 20 கிரிக்கெட் போட்டிகளின் தொடராக அதனைவிட மிக சிறப்பாக இந்த வருட எல்.பி.எல். கிரிக்கெட் போட்டியை நடத்த ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் முன்வந்துள்ளதாக அதன் கௌரவ செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்தார். டிசம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள லங்கா பிறீமியர் லீக் மூன்றாவது அத்தியாயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு எஸ். எல். சி. கேட்போர்கூடத்தில் வியாழக்கிழமை (17) நடைபெற்றபோது மொஹான் டி சில்வா இதனைக் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய அவர், "வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர்கள் இன்னும் அதிகமான அனுபவங்களைப் பெறுவதற்கும் அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கும் லங்கா பிறீமியர் லீக் சிறந்த வாய்ப்பை உருவாக்கிக்கொடுத்துள்ளது. அத்துடன் வர்த்தக ரீதியிலும் எமக்கு நிறைய பலன்கள், குறிப்பாக பொருளாதார ரீதியாக எமது நாட்டுக்கு நிறைய பலன் கிடைத்துள்ளது" என்றார்.

எல். பி. எல். போட்டி தொடர்பாக விளக்கிய போட்டி ஏற்பாட்டுக் குழுப் பணிப்பாளர் சமன்த தொடங்வல, "இலங்கை கிரிக்கெட் நாட்காட்டியில் மூன்றாவது லங்கா பிறீமியர் லீக் முக்கிய இடம்பிடிக்கவுள்ளது. ஏனெனில் இலங்கையிலுள்ள இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு தங்களது திறமைகளை வெளிப்படுத்த இந்த வருட லங்கா பிறீமியர் லீக் ஒரு களமாக அமையவுள்ளது. அத்துடன் இப் போட்டியில் பங்குபற்றுவதன் மூலம் நிதி ரீதியாகவும் அவர்கள் நிறைந்த பலனைப் பெறுவர்" என்றார். இந்த வருட லங்கா பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஹம்பாந்தோட்டை, கண்டி, கொழும்பு ஆகிய மூன்று இடங்களில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். நடப்பு சம்பியன் ஜவ்னா கிங்ஸ், கலம்போ ஸ்டார்ஸ், தம்புள்ள ஜயன்ட்ஸ், கோல் க்ளடியேட்டர்ஸ், கண்டி ஃபெல்கன்ஸ் ஆகிய 5 அணிகள் அதே உரிமையாளர்களுடன் பங்குபற்றும் லங்கா பிறிமியர் லீக்கின் மூன்றாவது அத்தியாயம் ஹம்பாந்தோட்டையில் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டப் போட்டிகள் கண்டியிலும் கடைசிக் கட்டம் மற்றும் இறுதிச் சுற்றுப் போட்டிகள் கொழும்பிலும் நடைபெறும். இறுதிப் போட்டி டிசம்பர் மாதம் 23ஆம் திகதி நடைபெறும்.

LPL T20
LANKA PREMIER LEAGUE 2022

"2021இல் முதலாவது லங்கா பிறீமியர் லீக் பெரும் சிரமத்திற்கு மத்தியில் நடத்தப்பட்டதை அனைவரும் அறிவர். கொவிட் - 19 தொற்று நோய் தாக்கம் காரணமாக முழு உலகமும் முடங்கியிருந்த நிலையில் சவால்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் லங்கா பிறீமியர் லீக் போட்டியை வெற்றிகரமாக நடத்தினோம். ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் எடுத்துக்கொண்ட அயரா முயற்சியும் ஐபிஜி நிறுவனம் வழங்கிய பூரண ஒத்துழைப்பும் அப் போட்டியை வெற்றிகரமாக நடத்த உதவின. கடந்த வருடம் இரண்டாவது அத்தியாயத்தையும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மீண்டும் வெற்றிகரமாக நடத்தினோம். "எவ்வாறாயினும் மூன்றாவது அத்தியாயம் முதலிரண்டு அத்தியாயங்களைவிட மிகவும் சவால்மிக்கதாக அமையவுள்ளது. ஏனெனில் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த வருட எல் பி எல் நடத்தப்படவுள்ளது. 2020இல் முதலாவது அத்தியாயம் நடத்தப்பட்டபோது அமெரிக்க டொலரின் பெறுமதி 202 அல்லது 210 ரூபாவாக இருந்தது. அப்போது அணி உரிமையாளர்களுக்கு அது பெரிய பொருட்டாக அமையவில்லை. ஆனால், தற்போது டொலரின் பெறுமதி 355 ரூபாவாகும். இதன் காரணமாக பெருந்தொகை பணம் செலுத்தி அணிகளை உரிமையாளர்கள் வாங்கவேண்டியுள்ளது. இதன் காரணமாக அனுசரணையாயர்கள் கிடைப்பது இலகுவல்ல. ஆனால், இத்தகைய சிரமங்கள், சவால்களுக்கு மத்தியிலும் உரிமையாளர்களும் அனுசரணையாளர்களும் எமக்கு கிடைத்துள்ளனர்" என சமன்த தொடங்வெல தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக ஆகஸ்ட் மாதம் அளவில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த லங்கா பிறீமியர் லிக் டிசம்பர் மாதத்திற்கு பிற்போடப்பட்டதால் சில வெளிநாட்டு வீரர்களை இழக்க நேரிட்டதாக அவர் கூறினார். லங்கா பிறிமியர் லீக் போட்டியில் விளையாட அணிகளில் இணைக்கப்பட்ட சில வெளிநாட்டு வீரர்கள் பிக் பாஷ், தென் ஆபிரிக்க லீக் ஆகியவற்றில் விளையாடுவதால் அவர்கள் இந்த வருடம் விளையாடமாட்டார்கள். ஆனால் அவர்களுக்கு பதிலாக சிறந்த வீரர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள் என தொடங்வெல கூறினார். அவுஸ்திரேலியாவில் பாலியல் சர்ச்சையில் சிக்கியுள்ள தனுஷ்க குணதிலக்க, உபாதையினால் ஓய்வு பெற நேரிட்டுள்ள சில வீரர்கள் ஆகியோருக்குப் பதிலாக தெரிவாளர்களால் 12 வீரர்கள் பரிந்துரைக்கப்பட்டு அவர்கள் அந்தந்த அணிகளில் இணைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை இந்த வருட லங்கா பிறிமியர் லீக் போட்டிக்கு உலகப் பிரசித்திபெற்ற முன்னாள் வீரர்கள் மூவர் சிறப்பு தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அது போட்டியின் மதிப்பை அதிகரிக்கச் செய்யும் எனவும் தொடங்வெல குறிப்பிட்டார். லங்கா பிறீமியர் லீக் கிரிக்கெட் தூதுவர்களாக சேர் விவியன் றிச்சர்ட்ஸ், வசீம் அக்ரம், சனத் ஜயசூரிய ஆகியோரை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நியமித்துள்ளது. ஐந்து அணிகளுக்கும் வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுவிட்டதாகவும் அணி உதவியாளர்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவித்த தொடங்வெல, அடுத்த ஓரிரு தினங்களில் அணிகளின் முழு விபரங்கள் வெளியிடப்படும் என்றார்.

## தில்ஷானின் மகள் விக்டோரியா ரு-16 அணிக்காக விளையாடுகிறார்

அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்ட விக்டோரியா மகளிர் அணியை பிரதிநிதித்துவப்படுத்த இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் டிஎம் தில்ஷானின் மகள் லிமான்சா தெரிவு செய்யப்பட்டுள்ளார். தனது மகளின் தேர்வை அறிவித்த முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர், "என்ன ஒரு பெருமையான தருணம். லிமான்சா தனது கிரிக்கெட் வாழ்க்கையில் மற்றொரு மைல்கல்லை கடந்துள்ளார்" என்று கூறினார். "16 வயதுக்குட்பட்ட விக்டோரியா மகளிர் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அற்புதமான சாதனைக்கு எனது அருமை மகளுக்கு வாழ்த்துகள். உங்கள் அர்ப்பணிப்பும் அர்ப்பணிப்பும் வலிமையின் தூணாகத் தொடரும். நல்வாழ்த்துக்கள்!!" என்று தில்ஷான் சமூக வலைத்தளத்தில் ஒரு பதிவில் மேலும் தெரிவித்துள்ளார்.

## கடைசி நிமிடம் வரை போராடுவேன்!

இலங்கையின் தடகள வீரர்களின் முன்னேற்றுவதற்கான தனது முயற்சிகளை இறுதி வரை கைவிடப் போவதில்லை என இலங்கையின் தடகள வீரர் யுபுன் அபேகோன் தெரிவித்துள்ளார். "தெரண டோக் வித் சத்துர" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார். நிகழ்ச்சியில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த யுபுன் அபேகோன்.

"இலங்கையில் உள்ள நமது விளையாட்டுத் தொழில்நுட்பத்திற்கும் உலகில் உள்ள விளையாட்டுத் தொழில்நுட்பத்திற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. நாட்டில் விளையாட்டைப் பொறுத்த வரையில் எந்த வேலைத் திட்டமும் இல்லை. வாரத்தில் 6 நாட்கள் காலையிலும் மாலையிலும் நான் அங்கு பயிற்சி செய்கிறேன். நிறுவனாங்கள் பெரும்பாலும் இல்லை.

குறித்த விளையாட்டை முன்னோக்கி கொண்டு செல்லவதன் மூலம் தாங்கள் பிரேன்டை மேலும் பிரபலமடைய வைக்கலாம் என அவர்கள் நினைப்பது இல்லை.

மேலும், யாராவது ஒருவர் முன்னோக்கி செல்லும் போது, அவர்களை மேலும் முன்னோக்கி கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும். அதை நான் மட்டும் செய்தால் போதாது. பாடசாலையில் விளையாடும் இந்த இளம் தலைமுறையினர் ஒரு நாள் குறித்த இடத்துக்கு வரும் போது, என்னால் அந்தக் கட்டத்தை எட்ட முடியுமானால், அது இலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக மாறும் என நினைக்கிறேன். எனவும் அவர் குறிப்பிட்டார்.



# உலக பார்வை



## பலஸ்தீன அகதிகள் முகாமில் தீ!

பலஸ்தீனத்தின் காஸா பிராந்தியத்தில் ஏற்பட்ட தீப் பரவலில் குறைந்தபட்சம் 21 பேர் பலியானதுடன்



மேலும் பலர் காயமடைந்துள்ளனர். காஸாவின் வடபகுதியிலுள் ஜபாலியா அகதிகள் முகாமில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவர்களில் 9 சிறார்களும் அடங்கியுள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுவதாக காஸாவிலுள்ள இந்தோனேஷிய வைத்தியசாலையொன்றின் அவசரசேவைப் பிரிவு பணிப்பாளர் டாக்டர் சலேஹ் அபு லைலா தெரிவித்துள்ளார். குறித்த பகுதியில் பெருமளவு எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தீ விரைவாக பரவியதாக ஆரம்ப விசாரணைகள் தெரிவிக்கின்றன என காஸாவின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## அதிக ஊழியர்கள் ராஜினாமா: டுவிட்டர் அலுவலகங்கள் உடனடியாக மூடப்பட்டன

டுவிட்டர் நிறுவனத்தின் அனைத்து அலுவலகங்களும் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் தற் காலிகமாக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 21 ஆம் திகதி வரை 2 வாரங்களுக்கு இந்த அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. டுவிட்டர் நிறுவன ஊழியர்கள் நீண்ட நேரம் கடினமாக வேலை செய்ய வேண்டும் என அதன் புதிய உரிமையாளர் இலோன் மஸ்க் உத்தரவிட்டிருந்தார்.



இதற்கு இணக்கம் தெரிவிக்கும் விசுவாச ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு உள்ளூர் நேரப்படி வியாழன் மாலை 5 மணி வரை (இலங்கை, இந்திய நேரப்படி வெள்ளி காலை 3.30 மணிவரை) அவகாசம் வழங்கப்பட்டது. இதையடுத்து பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் ராஜினாமாவை அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், டுவிட்டர் அலுவலகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. டுவிட்டர் அலுவலகங்கள் நவம்பர் 21 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்துக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரரான இலோன் மஸ்க், கடந்த மாத இறுதியில் டுவிட்டர் நிறுவனத்தை வாங்கினார். அதன்பின் உயர் அதிகாரிகள் பலரையும் பதவியிலிருந்து நீக்கிய அவர், அந்நிறுவனத்தின் 7500 ஊழியர்களில் அரைவாசிப் போரை வேலையிலிருந்து நீக்கினார். வீட்டிலிருந்து பணியாற்றும் திட்டத்தையும் அவர் முடிவுக்கு கொண்டுவந்தார். டுவிட்டர் நிறுவனத்தை வாங்குவதற்கு செலவிடப்பட்ட பணத்தை ஈடுசெய்வதற்கு இலோன் மஸ்க் திணறி வருகிறார்.

## குவைத்தில் 7 பேருக்கு ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் மரண தண்டனை

குவைத்தில் 7 பேருக்கு ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்நாட்டில் இது போன்ற கூட்டு மரண தண்டனை நிறைவேற்றம் மிகவும் அபூர்வம் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட 7 பேர் மத்திய சிறைச்சாலையில் புதன்கிழமை (16) தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களில் 3 குவைத் நாட்டு ஆண்கள், ஒரு குவைத் நாட்டுப் பெண், ஒரு சிரியா நாட்டவர், ஒரு பாகிஸ்தானியர், ஒரு எத்தியோப்பிய பெண் அடங்குவர்.

மனிதர்களின் மிகவும் புனிதமான உரிமையாகிய உயிர்வாழும் உரிமையை அவர்கள் பிறரிடமிருந்து பறித்ததால் இந்த தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அரசு தரப்பு நீதித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரண தண்டனை நிறைவேற்றத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.



## கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை நடத்தியது வட கொரியா!

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை என சந்தேகிக்கப்படும் நீண்ட தூர வீச்சுவடைய ஏவுகணையொன்றை வட கொரியா சோதனை செய்துள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. அமெரிக்கப் பெருநிலப்பரப்பை அடையக்கூடிய வீச்செல்லையை இந்த ஏவுகணை கொண்டிருக்கலாம் எனவும் ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜப்பானுக்குரிய பொருளாதார வலயத்துக்குள் இந்த ஏவுகணை வீழ்ந்ததாக நம்பப்டுவதாகவும் இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நடவடிக்கை எனவும் ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிதா கூறியுள்ளார். வட கொரியா அண்மைக்காலமாக அதிக தடவைகள் ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளது.




## 298 பேரைக் காவுகொண்ட மலேசிய விமான தாக்குதல் வழக்கில் மூவர் குற்றவாளிகள் என தீர்ப்பு!

2014 ஆம் ஆண்டு கிழக்கு யுக்ரைனில் மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் MH17 சுட்டு வீழ்த்தப்பட்டு 298 பேர் கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இரண்டு ரஷ்யர்களுக்கும், மொஸ்கோ சார்பு யுக்ரேனிய பிரிவினைவாதி ஒருவருக்கும் ஆயுள் தண்டனை விதித்து நெதர்லாந்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. போதியளவு சாட்சி இல்லாத காரணத்தினால் ரஷ்ய பிரஜை ஒருவர் இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதிகள், கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாமலேயே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நெதர்லாந்தின்-அம்ஸ்டர்டாம் ஷிபோல் விமான நிலையத்திலிருந்து மலேசியாவின் கோலாலம்பூருக்குச் சென்ற இந்த விமானம் - கிரிமியா, டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகியவற்றை இணைக்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது படைகளை அனுப்பிய சிறிது நேரத்தில் யுக்ரைனுக்கு மேலாக பறந்துக் கொண்டிருந்தது.

இதன்போது, ரஷ்யாவுக்கும் யுக்ரைனுக்கும் இடையே தரையிலும் வானிலும் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இதன் காரணமாக யுக்ரைனுக்கு மேலாக 32,000 அடி உயர வான்வெளிப்பகுதி விமானப் போக்குவரத்துக்காக தடை செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், 33,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த போயிங் 777 ரக விமானம்



MH 17 , GMT நேரத்தின்படி மதியம் 1:20 க்கு கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இதனையடுத்து, நெதர்லாந்து பாதுகாப்பு சபை, அமெரிக்க மற்றும் ஜெர்மன் உளவுத்துறை ஆகியவை இந்த விமானம், ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளால் ரூடெனி சுட்டு வீழ்த்தப்பட்டதாக முடிவுக்கு வந்தன.

எனினும், ரஷ்ய அரசாங்கம் தமக்கும் இந்த சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று மறுத்தது. இந்த சம்பவத்தில் 153 சீன பிரஜைகள் உட்பட விமானத்தில் இருந்த 239 பேரும் உயிரிழந்ததாக கருதப்பட்டு வருகிறது.

இதனையடுத்து, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்று இந்த வழக்கு விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள், அம்ஸ்டர்டாமில் இருந்து கோலாலம்பூருக்குப் பறந்து கொண்டிருந்த போயிங் 777 விமானம், 2014 ஜூலை 17 ஆம் திகதியன்று மொஸ்கோ சார்பு யுக்ரேனியப் போராளிகளால் ஏவப்பட்ட பக் ஏவுகணையால் வீழ்த்தப்பட்டது என்பதை நிரூபித்ததாக நெதர்லாந்து நீதிமன்ற தலைமை நீதிபதி ஹென்ட்ரிக் ஸ்டீன்ஹயிஸ் தமது தீர்ப்பின்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன், விவசாய நிலங்கள் மற்றும் சூரியகாந்தி வயல்களில் இருந்து சிதைவுகள் மற்றும் உடல் பாகங்கள் மீட்கப்பட்டதற்குமான சான்றுகளும் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டன. ரஷ்யர்களான இகோர் கிர்கின் மற்றும் செர்ஜி டுபின்ஸ்கி மற்றும் யுக்ரேனிய பிரிவினைவாதி லியோனிட் கர்சென்கோ ஆகிய மூன்று பேரும் சேர்ந்து ரஷ்ய இராணுவ தளத்திலிருந்து பக் ஏவுகணை அமைப்பை யுக்ரைனுக்குள் கொண்டு சென்று அதை ஏவுவதற்கான நிலைக்கு கொண்டு வந்ததாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார். இந்த மூவரும் சம்பவத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளவில்லை என்றாலும் அவர்கள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தப் பயன்படுத்தப்பட்ட ரஷ்ய ஏவுகணையை யுக்ரேனுக்குள் கொண்டுசெல்ல உதவியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எனினும், அவர்கள் இதுவரை தலைமறைவு வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். இதேவேளை வழக்கின் தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்கு குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட மூவருக்கும், இரண்டு வார கால அவகாசத்தை நீதிமன்றம் வழங்கியுள்ளது. இவர்களுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பை யுக்ரேன் ஜனாதிபதி வரவேற்றுள்ளார். எனினும் ரஷ்யா அந்தத் தீர்ப்பைக் கடுமையாகச் சாடியுள்ளது.




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 20.11.2022 அன்று வெளியிடப்பட்டது.